Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இணைந்து விட்டீர்களா?
நிலவு .com in
யாழ் Online
275, யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 09 (22.11.2004) திங்கட்கிழமை இதழ்:52

## மாவீரர் எழுச்சி வார நிகழ்வு உணர்வுபூர்வமாக ஆரம்பம்!



(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் எழுச்சிவார ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை 9 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில், துயிலுமில்ல புனரமைப்பு குழுப் பொருளாளர் இ.சந்திரன் தலைமையில் மிகவும் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகின

நேற்றைய ஆரம்பநாள் நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் கப்டன் சண்டியாவின் தாயார் றீற்றம்மா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றினார்.

இதனைத் தொடர்ந்து ஈகச்சுடரினை யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஜெயராஜ், வலிகாமம் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சாம்பசிவம், யாழ்.காங்கேசன்துறை சிற்றூர்திச் சங்கத் தலைவர் அமிர்தராசா, துயிலுமில்ல புனரமைப்புக்குழு உறுப்பினர்களான சிவராசா மற்றும் சந்திரசேகரம் ஆகியோர் ஏற்றினர்.

மலர்மாலையைத் துயிலுமில்ல புனரமைப்புக் குழு உறுப்பினர் பத்மநாதன், யாழ்.தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் அணிவித்தனர்.

தலைமையுரையை அடுத்து நினைவுரைகளை கோப்பாய் கல்வியற்கல்லூரி முகிழ்நிலை மாணவன் சுதன், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சொலமன் சூ.சிறில், யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் நிகழ்த்தினர். நிறைவாக துயிலுமில்ல புனரமைப்புக்குழு உறுப்பினர் நவரத்தினன் நன்றியுரையை நிகழ்த்தினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீது மட்டக்களப்பில் தொடர்ந்தும் தாக்குதல்கள்!

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளை இலக்குவைத்து – அங்குள்ள இரண்டு அரசியற்துறை அலுவலகங்கள் மீது நேற்று அதிகாலையும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.**

**இந்தத் தாக்குதல்களை இராணுவப் பின்னணியினரே மேற்கொண்டதாகவும் – இதற்கு படையினரே பொறுப்பேற்க வேண்டும் எனவும் புலிகள் தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.**

**நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மட்டக்களப்பு நகரிலுள்ள புளியந்தீவு கோட்ட அரசியற்துறை அலுவலகம் மீதும் அதிகாலை 1.30 மணியளவில் களுவாஞ்சிக்குடியிலுள்ள பட்டிருப்புக்கோட்ட அலுவலகம் மீதும் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.**

**எனினும் புளியந்தீவு கோட்ட அரசியற்துறை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் குறிப்பிடத்தக்க சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.**

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளுக்கு ஆபத்து நேர்ந்தால் இராணுவமே அதற்குப் பொறுப்பு !

### மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் எச்சரிக்கை!



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலும் களுவாஞ்சிக்குடியிலும் தமது அரசியற்துறை அலுவலகங்களின் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

போராளிகளுக்கு ஏதாவது நடக்குமானால் அதற்கான பொறுப்புக்களை இராணுவம்தான் ஏற்கவேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று மாலை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஆயிரக் கணக்கானோர் திரண்டு

## படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கு வல்வெட்டித்துறையில் அஞ்சலி செலுத்தினர்!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட இரு இளைஞர்களினதும் இறுதிக் கிரியைகள் நேற்று கொட்டும் மழைக்கும் மத்தியில் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

இந்த இறுதி யாத்திரையில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். பாடசாலை மாணவர்கள், விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள், கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உட்பட பலர் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு இருவரது இல்லங்களிலும் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் பூதவுடல் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத்திற்கு எடுத்துவரப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றது.

கிராம அலுவலர் சிவபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தங்கவேல், ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் பிரதிநிதி நவகுலராஜா, வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கத்தின் பொதுமுகாமையாளர் க.சூரியகுமார், வலி. வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் பயஸ், சிதம்பரக் கல்லூரி அதிபர் அரியரத்தினம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

**மாவீரர்களே! உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது. உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகிறது.**

**வே.பிரபாகரன் – தமிழீழத் தேசியத் தலைவர்**

### முறைகேடாக நடந்ததாக

## பொலிஸ் அத்தியட்சகர் மன்னிப்புக் கோரினார்!

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலை நடைமுறைகளுக்கு முரணாக நடந்துகொண்டமைக்காக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மன்னிப்புக் கோரினார்.

கடந்த வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபருக்குப் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறி பெருமளவு இராணுவத்தினரும், பொலிஸாரும் வைத்தியசாலை விடுதிக்குள் ஆயுதங்களுடன் காணப்பட்டதுடன், நோயாளர்களுக்கும் பலத்த சிரமத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

அத்துடன் காயமுற்றிருந்த நபரை வைத்தியசாலை நிர்வாக நடைமுறைகளுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# படுகொலையான இளைஞர்களின் இறுதி நிகழ்விலிருந்து








# படுகொலைகள் தொடர்வதை நாம் அனுமதிக்கமாட்டோம்!

## அஞ்சலி நிகழ்வில் சி.இளம்பரிதி தெரிவிப்பு

### சி.இளம்பரிதி



தமிழ் மக்களின் ஒற்றுமையை - தேசிய எழுச்சியை - தலைவரின் பிறந்த தினத்தைக் கொண்டாட மக்கள் எடுத்து வரும் முயற்சியை, உணர்வுகளைச் சிதறடிக்கும் நோக்குடன் செய்யப்பட்ட கொலைகளே இவை என்பது ஐயம் தெளிவுபட்ட உண்மை.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அப்பாவிப் பொதுமக்களைச் சாகடிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடும் மக்கள் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தால் அவர்களுடைய போராட்டத்தைத் தீர்த்து விடமுடியாது. இது வரலாறு எல்லோருக்கும் கற்றுத்தந்த பாடம்.

இரு இளைஞர்களும் இராணுவ முகாமுக்கு சமீபமாகவுள்ள விளையாட்டு மைதானத்தில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். எனவே இதற்குப் படையினரே பொறுப்பேற்க வேண்டும்.

மக்கள் மீது தொடர்ச்சியாக நெருக்கடிகளும், துப்பாக்கி வேட்டுக்களும் இடம்பெறுமானால் எமது மக்களின் உணர்வுகளைக் கட்டுப் படுத்தமுடியாது. மக்களின் உணர்வுகள் நசுக்கப்படுமானால் நிலைமையை யாருமே கட்டுபபடுத்த முடியாது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தின்போது காயமடைந்த பொன்னுத்துரை தெய்வேந்திரம் - முதல் வாக்குமூலம் அளித்தபோது இனந்தெரியாத சில நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்ததாகக் கூறியுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் பத்திரிகையாளரோ எந்த மக்களோ அனுமதிக்கப்படவில்லை. ஆனால் குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் தயார்ப்படுத்தப்பட்ட நிலையில் இந்தச் சம்பவத்துக்குப் புலிகள்தான் பொறுப்பு என்று வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது. உண்மையில் திட்டமிட்டு இதனைச் செய்துவிட்டு மக்களைக் குழப்பும் வகையில் பொய்யான செய்தியை பரப்புகின்றதன் பின்னணி என்ன?

அப்பாவி மக்கள் மீதான படுகொலைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பதை யாழ்ப்பாண மக்கள் எதிரிக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் இன்றுடன் முடியவேண்டும். இன்னும் தொடருமானால் மக்களும், எமது தலைமையும் அனுமதிக்கப்போவதில்லை. எதிரிகள் எமது மக்கள் மீது இராணுவ, அரசியல் ரீதியாக எந்த நாசகார நடவடிக்கையை மேற கொண்டாலும் நாமும் எமது மக்களும் ஒன்றிணைந்து அதனை முறியடிப்போம் எனத் தெரிவித்தார்.

### வல்வை சிதம்பரக் கல்லூரி அதிபர் ந.அரியரத்தினம்



பயிற்சியில் ஈடுபட்டிருந்த இளம் விளையாட்டு வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை மிகவும் கீழ்த்தரமானதும், வேதனைக்குரியதுமாகும்.

தலைவர் பிரபாகரனின் பிறந்த தின நிகழ்வை பெருமெடுப்பில் நடத்துவதற்கு எடுக்கப் பட்டுவந்த முயற்சியை குழப்பி மக்களை இந்த நிகழ்வில் பங்குபற்ற விடாது தடுப்பதற்காகவே இந்தப் படுகொலை இடம்பெற்றுள்ளது.

### நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம்

உலகநாடுகள் போற்றுகின்ற தலைவனின் பிறந்த நாளையும், தாயக விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களின் நினைவு நாள் நிகழ்வுகளை, பெரும் எழுச்சியுணர்வுடன் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்ற வேளை இவ்வாறான படுகொலைகளைச் செய்து - மக்களை அச்சுறுத்தி நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு செய்யப்பட்ட கபட நாடகமே இந்தப் படுகொலைச் சம்பவமாகும்.



இவ்வாறு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து - மக்களை மாவீரர் நாள் நிகழ்வுகளில் கலந்து கொள்ளாது தடுப்பதற்கு ஈ.பி.டி.பியினரும், படையினரும் இணைந்து செய்த இந்தப் படுகொலையைக் கண்டித்து நேற்று முன்தினம் குடாநாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்து காட்டிய எதிர்ப்பு இவர்களின் திட்டத்தை தவிடுபொடி யாக்கியுள்ளது என்றார்.

### வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்க சமாச பொதுமுகாமையாளர் சூரியகுமார்



எதிர்வரும் 26 ஆம் திகதி உலக நாடுகள் போற்றும் தேசியத் தலைவனின் 50 ஆவது பிறந்ததின நிகழ்வை மிகப் பிரமாண்டமான முறையில் குதூகலமாகக் கொண்டாடுவதற்கு வல்வை மக்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றவேளை -

அதனைக் குழப்புவதற்கு இராணுவத்தினரின் கைக்கூலிகளாக இருக்கும் ஈ.பி.டி. பியினரின் துணையுடன் திட்டமிட்டு இராணுவத்தினர் நடத்திய நாடகமே இந்தப் படுகொலைச் சம்பவம்.

இந்தப் படுகொலையைச் செய்தவர்களை அழிப்பதற்கு நாம் அனைவரும் ஒற்றுமையுடன் திடசங்கற்பம் பூணவேண்டும். எமது தலைவன் பிறந்து வாழ்ந்த இந்த மண்ணுக்கு -

அந்த தேசியத் தலைவனுக்கு இடை யூறு விளைவிக்கும் எந்த அடிவருடிகளையும் வாழ்வதற்கு அனுமதிக்க முடியாது.

### வலிகாமம் வடக்கு கடற்தொழிற் சங்கத் தலைவர் பயஸ்



கடல்கொள் சமூகத்தினராகிய நாம், கடலிலும் தரையிலும் இன்னல்களையும் அச்சுறுத்தல்களையும் முன்னரும் தற்போதும் எதிர் நோக்கி வருகிறோம்.

இவ்வாறான படுகொலைகள் கண்டிக்கப்பட வேண்டும்.

இந்தக் கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இப்படியான படுகொலைகள் இன்னொரு தடவை ஏற்படாதிருப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் பிரதிநிதி க.நவகுலராஜா



பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை இராணுவத்தினரின் கைக் கூலிகளால் திட்டமிட்டுச் செய்யப்பட்டதே. இந்தப் படுகொலையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது விடுதலைப் போராட்டம் சர்வதேச மட்டத்தில் மிகவும் எழுச்சி பெற்றுள்ள வேளையில் எமது இனத்திற்கிடையிலுள்ள ஒற்றுமையைக் கண்டு - இனத்திற்குள் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு எதிரி பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றான். நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருப்பதன் மூலம் எதிரியின் கபடத்தனைத்தை முறியடிக்க முடியும். இந்தப் படுகொலைச் சம்பவத்தை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என மக்கள் சார்பாக அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

### வல்வை விளையாட்டுக் கழகத் தலைவர் மு.தங்கவேல் -



விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான படுகொலைகளைச் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.


ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
அஜித் இருவேடங்களில், பூஜா நடித்த
அட்டகாசம்

பு.நே 10.30, 2.30, 6.30, 9.30 ரீக்கற் முற்பதிவு செய்யலாம்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)
தனுஷ், பிரியா நடித்த
[illegible] (ரீல்ஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே) (சி-3319)

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான
R.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த
சத்ரபதி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை
அஜித், சிநேகா நடித்த
ஜனா (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(சி-2723)

# சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பியுங்கள்!

## அரசு – புலிகளிடம் அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டுமென அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இருவருடனும் அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலர் ஆர்மிரேஜ் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு பேசியபோதே இதைத் தெரிவித்ததாக அமெரிக்க இராஜாங்கச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலகத்தின் பிரதிப் பேச்சாளரான அடம் எலியால் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையின் சமாதான முயற்சிக்கு அமெரிக்கா தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்குமெனப் பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் ஜனாதிபதி சந்திரிகாவுடனும், எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியபோது தெரிவித்தார்.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு அனைத்துக் கட்சியினரும் இணைந்து செயற்படவேண்டும். பேச்சுவார்த்தை மீள, விரைவாக ஆரம்பிக்கப்படவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா நவம்பர் 17 ஆம் திகதி தெரிவித்த கருத்தை அமெரிக்கா வரவேற்கிறது. ஐக்கிய இலங்கைக்குள் சமாதான நடவடிக்கைகள் மூலம், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி முயற்சி செய்துவருகிறார்.

அத்துடன், சமாதான நடவடிக்கையில் அனுசரணையாளராகவுள்ள நோர்வேயின் செயற்பாடுகளையும் ஆர்மிரேஜ் பாராட்டியுள்ளார்.

அண்மைய நாட்களில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பயங்கரவாத நடவடிக்கைகளை அமெரிக்கா வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த அந்த நாட்டு மக்கள் மட்டுமன்றி, சர்வதேச சமூகம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கைகள் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த வகையில் இராணுவ அலுவலர் ஒருவர் அண்மையில் கொல்லப்பட்டமையானது - சமாதான நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக அமையாது.

பயங்கரவாத நடவடிக்கைகளைச் சொற்களால் மட்டுமன்றி, செயல்களாலும் கைவிட்டுவிட்டு மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகள் திரும்ப வேண்டுமென அமெரிக்கா கேட்டுக்கொள்கின்றதென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் மரணதண்டனை அமுல்படுத்த உத்தரவு

கொலை, பாலியல் வல்லுறவு மற்றும் போதைவஸ்து கடத்தல் போன்ற குற்றச்செயல்களுக்கு நேற்றுமுன்தினம் முதல் மரண தண்டனையை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், எடுக்கப்பட்ட முடிவுகளின்படி குற்றப் புலனாய்வுப் பிரிவு உடனடியாக அமுலுக்கு வரும்வகையில், மீளமைக்கப்பட்டுப் பலப்படுத்தப்படவுள்ளது.

நீதிமன்றங்களினதும், நீதிபதிகளினதும் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்காக விசேட பொலிஸ் பிரிவொன்றை உருவாக்கவும், பாதுகாப்புச் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## புளொட் – பொதுமக்கள் மோதல்

## வவுனியாவில் இருவர் காயம்!

(வவுனியா)

பொதுமக்களுக்கும், புளொட் இயக்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்நிலை காரணமாக இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கோவில்குளத்தில் தண்ணீர் எடுப்பதில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சுமன், சதாசிவம் ஆகியோர் பொதுமக்களுடன் முரண்பட்டதாகவும், இவர்கள் கத்திகள் சகிதம் பொதுமக்களைத் தாக்க முற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் பொதுமக்களுக்கும், புளொட் இயக்கத்தினருக்கும் இடையே முறுகல்நிலை முற்றவே, மேலும் பல புளொட் இயக்க உறுப்பினர்கள் தடிகள், பொல்லுகள் சகிதம் அங்கு வந்ததாகவும், இதன்போது ஏற்பட்ட கைகலப்பில் கோவில்குளத்தைச் சேர்ந்த அன்னராசா, செந்தூரன் ஆகியோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையிடம் மக்கள் முறையிட்டதையடுத்து, அந்தப் பகுதிக்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் சென்றதும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்ததாகத் தெரிவித்த, வவுனியா மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் தி.ஞானவேல் இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கும் தாம் அறிவித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு நகரில் கைக்குண்டு வீச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் வீடொன்றின் மீது நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் இனந் தெரியாத நபர்களால் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

மேல்மாடித் தெருவும், வன்னியனார் தெருவும் சந்திக்கும் சந்தியிலுள்ள வீடொன்றின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கைக்குண்டு, வீட்டின் சுவரில் விழுந்து வெடித்ததால் வீட்டுக்கோ வீட்டிலுள்ளவர்களுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இதே இடத்திலுள்ள மற்றுமொரு வீடொன்றின் மீதும் கைக்குண்டு வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கான காரணம் என்னவென இதுவரை கண்டறியப்படவில்லை என, மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து 2 பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகின்றனர்.

## போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கும் சம்பளம் உயர்வு வழங்க வேண்டும்

### போக்குவரத்துச் சேவைச் சங்கம் கோரிக்கை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்களுக்கான 2500 ரூபா மாதாந்த வேதனம் அடுத்த மாதத்திலிருந்து அனைத்துக் கொத்தணி, பஸ் சங்க ஊழியர்களுக்கும், இலங்கைப் போக்குவரத்துச் சங்க ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமெனக்கோரி, அனைத்திலங்கைப் போக்குவரத்து சேவைச் சங்கம் ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இவ்வாறு அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கொத்தணிப் பஸ் கம்பனிகளில் கடமையாற்றும் ஊழியர்- இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களைவிடக் குறைந்த மாதாந்த வேதனத்தையே பெறுகின்றனர். முன்னைய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்ட 60 வீதம் மற்றும் 40 வீதம் மாதாந்தச் சம்பள உயர்வு, கொத்தணி பஸ் கம்பனி ஊழியர்களுக்குக் கிடைக்கவில்லை.

எனவே, இதனை வழங்குமாறு கோரி, எமது சங்கத்தின்மூலம் அப்போதைய போக்குவரத்து அமைச்சருக்கும், தங்களுக்கும் தொடர்ச்சியாகக் கடிதம் எழுதியும் அது நிறைவேற்றப்படவில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 2003 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட 1250 ரூபாவான மாதாந்தத் தொகையும் இதுவரையில் சில கொத்தணிக் கம்பனி ஊழியர்களுக்கும், அவர்களது அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறித்தும், எமது சங்கம் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படாமையால் இந்தத் தடவை வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ள 2500 ரூபா மாதாந்தச் சம்பள உயர்வு கொத்தணி மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சேவை ஊழியர்களுக்கும், கிடைக்காமல் போய்விடுமோ என்ற ஐயப்பாடு தமக்கு ஏற்பட்டுள்ள தெனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தே)

## சட்டமும், அமைதியும் மோசமான நிலையில்!

### ஐ.தே.க. கண்டனம்

(கொழும்பு)

நாட்டின் சட்டமும், அமைதியும் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தற்போது நாட்டின் சட்டத்துக்கும், அமைதிக்கும் பதிலாகத் தனிப்பட்ட குரோதங்களும், கொலை வெறியுமே மேலோங்கிக் காணப்படுகிறது. அத்துடன் இந்த நாட்டிலுள்ள நீதிபதிகள் வழக்குகள் தொடர்பாக சுயாதீனமான தீர்மானங்களை எடுக்க முடியாமல் உள்ளதானது, மிகவும் வருத்தத்துக்குரிய விடயமாகும்.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில்வே அதிகார சபையை நீக்கும் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ரயில்வே அதிகாரசபையை நீக்குவதற்கான சட்டமூலம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா சமர்ப்பித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், ஊழியர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் ரயில்வே திணைக்களத்தை, அதிகாரசபையாக மாற்றியிருந்தது. இதை மீண்டும் திணைக்களமாக மாற்றம் செய்யுமாறு ரயில்வே ஊழியர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைக் கடந்த தேர்தலின்போது கேட்டிருந்தனர். இது தேர்தல் உறுதிமொழியாகவும் வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட உறுதி மொழியை நிவர்த்தி செய்யும் வகையிலேயே இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. (தே)

## காத்தான்குடியிலும் கைக்குண்டுத் தாக்குதல்!

அகில இலங்கை 'த்ரீக்கத்துல் முப்லிஹின்' மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரின் காத்தான்குடி இல்லம் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது அமைப்பாளர் எம்.ஐ.கலீல் உட்பட வீட்டில் எவரும் இருக்கவில்லை.

வீசப்பட்ட கைக்குண்டு வீட்டின் மீது விழுந்து வெடித்தமையால் வீடு சிறு சேதத்துக்குள்ளானது.

இஸ்லாமிய மத அடிப்படைக் கோட்பாடு தொடர்பாக, காத்தான்குடி பிரதேசத்தில் ஜம்மியத்துல் உலமா சபைக்கும் அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவைக்குமிடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

மற்றுமொரு பிரிவினராகிய தரீக்கத்துல் முப்லிஹின் கோட்பாட்டை பின்பற்றுபவர்களுடன் எந்த இணக்கப்பாடும் இதுவரை காணப்படாத நிலையிலேயே இத்தகைய வன்முறைகள் தொடர்கின்றன.

இந்த கோட்பாட்டாளர்கள் தொழுகை, நோன்பு போன்ற இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகள் முக்கியமானவை அல்ல எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறிப்பிட்ட பிரிவினருக்கு எச்சரிக்கை விடுக்கும் துண்டுப் பிரசுரமொன்று 'ஈமானிய நெஞ்சங்கள்' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.

## அரச ஊழியர்களின் ஆதரவின்றி வேலை நேரம் அதிகரிக்கப்படாது!

### ஜே.வி.பி அறிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் முழுமையான ஆதரவின்றி அவர்களின் சேவை நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்படமாட்டாதென ஜே.வி.பி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சேவைநேரம் ஒரு மணித்தியாலத்தால் நீடிக்கப்படுவதாக நிதி அமைச்சர் தெரிவித்த யோசனைக்கு, அரச ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்களானால், அதை நடைமுறைப்படுத்தாமல் விடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் தயாரெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்

# தென்னாபிரிக்கா 459 ஓட்டங்கள்



(கான்பூர்)

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்துள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி கான்பூரில் இந்திய அணியுடன் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாவது நாளில் 7 விக்கெட் இழப்புக்கு 459 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்று முன்தினம் மாலை 4 விக்கெட் இழப்புக்கு 230 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை முடித்த தென்னாபிரிக்க அணி, நேற்றுக்காலை தொடர்ந்து ஆடியது.

டிப்பென்னரும், ஹோலும் நிதானமாக ஆட்டத்தை வெளிப்படுத்த முற்பட்டபோதும், ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்திலேயே டிப்பென்னர் ஆட்டமிழந்தார்.

48 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கங்கூலியின் பந்துவீச்சில் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் ஹோலுடன் புருன் இணைந்து நிதானமாக ஆடினார். இதனால் அணியின் ஓட்ட வேகம் அதிகரிக்கவில்லை.



இதற்கிடையில் ஹோல் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார். அபாரமாக ஆடிய இவர் 163 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கும்ளேயின் பந்துவீச்சில் போல்டாகி ஆட்டமிழந்தார்.



இவர் 454 பந்துகளில் 17 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதனையடுத்து பொலக் களமிறங்கினார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 445 ஆக இருந்தபோது - புருனும் ஆட்டமிழந்தார். 206 பந்துகளில் 3 சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 83 ஓட்டங்களை இவர் பெற்றிருந்தார்.

பொலக் 31 ஓட்டங்களுடனும், சோலேகிலி 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் நேற்றைய ஆட்டம் முடிவுக்கு வந்திருந்தது.

ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட் இழப்புக்கு 459 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பந்து வீச்சில் கும்ளே 5 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் சிங், கங்கூலி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்திய அணியினர் பந்து வீச்சில் 53 ஓட்டங்களை உதிரிகளாகக் கொடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## 110 ஆண்டுகளுக்குப் பின்னர் மைக்கல் கிளார்க் சாதனை!



நியூஸிலாந்துக்கு எதிராக பிறிஸ்பேனில் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 141 ஓட்டங்களைக் குவித்து சதம் அடித்ததன் மூலம், தாயகத்தில் மட்டுமல்லாது, வெளிநாடுகளிலும் முதல் போட்டியிலேயே சதம் அடித்த 2 ஆவது அவுஸ்ரேலிய வீரர் என்னும் சிறப்பை 23 வயதாகும் கிளார்க் பெற்றுள்ளார்.

110 ஆண்டுகளுக்கு முன்னதாக ஹரி கிரஹாம் என்னும் அவுஸ்ரேலிய வீரர் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் ஆடிய முதல் போட்டியில் சதம் அடித்துள்ளார். 1893 ஆம் ஆண்டு லோர்ட்ஸில் இங்கிலாந்துக்கு எதிராக 107 ஓட்டங்களையும், தாயகத்தில் சிட்னியில் 1894 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் அதே இங்கிலாந்துக்கு எதிராக 105 ஓட்டங்களையும் அவர் சேர்த்துள்ளார்.

பெங்களூரில் கடந்த மாதம் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 4 டெஸ்ட் கொண்ட தொடரின் முதல் போட்டியில் 151 ஓட்டங்களைக் குவித்தார் கிளார்க். இதேபோல் உள்நாடு, வெளிநாடுகளில் ஆடிய முதல் போட்டியில் சதம் அடித்த சிறப்பை தென்னாபிரிக்காவின் கெப்ளர் வெஸல்ஸும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கபில்தேவின் சாதனையை நெருங்குகின்றார் கும்ளே!



அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்த இந்தீய வீரர் என்ற பெருமையைத் தக்க வைத்திருக்கும் கபில்தேவின் சாதனையை முறியடிக்கும் இலக்குடன் அனில் கும்ளே முன்னேறி வருகிறார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்கள் கைப்பற்றிய வீரராகத் திகழ்பவர் வோன். அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த அவர் 116 டெஸ்டில் 545 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இலங்கை வீரர் முரளீதரன் 532 விக்கெட்டுக்கள் எடுத்து 2 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் வீரர் வோல்ஸ் 519 விக்கெட்டுகள் கைப்பற்றி 3 ஆவது இடத்திலும், அவுஸ்ரேலிய வீரர் மக்ரா 455 விக்கெட்டுக்கள் எடுத்து 4 ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்திய வீரர்களில் அதிக விக்கெட்டுக்கள் சாய்த்தவர் கபில்தேவ் ஆவார். அவர் 131 டெஸ்டில் விளையாடி 434 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார். உலக அளவில் அவர் 5 ஆவது இடத்தில் உள்ளார்.

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான கும்ளே, கபில்தேவின் சாதனையை நோக்கி நெருங்கிக்கொண்டிருக்கிறார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்று முன்தினம் தொடங்கிய டெஸ்ட் போட்டிக்கு முன்பு கும்ளே 424 விக்கெட்டுக்கள் கைப்பற்றியிருந்தார். தற்போது தென்னாபிரிக்க அணியுடனான நேற்றைய ஆட்டம் வரை கும்ளே 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இதன்மூலம் அவர் 429 விக்கெட்டைத் தொட்டுள்ளார்.

கபில்தேவின் சாதனையை முறியடிக்க கும்ளேக்கு இன்னும் 6 விக்கெட்டுக்கள் தேவை. இந்த டெஸ்டிலோ, அல்லது கொல்கத்தாவில் நடைபெறும் 2 ஆவது டெஸ்டிலோ இந்தச் சாதனையை அவர் முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திளையாட்டு

# வலிகாமம் வலய பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 16 வயதுப் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், 18 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் முதலாமிடத்தைப் பெற்றன.

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற 16 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி மோதியது.

இதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கு எதிராக 5 கோல்களை அடித்ததன் மூலம் வலயக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இரண்டாமிடத்தை யூனியன் கல்லூரியும் மூன்றாமிடத்தை ஸ்கந்தவரோதயா கல்லூரியும் பெற்றன.

18 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் - மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிராக 3 கோல்களை அடித்து மானிப்பாய் இந்துக் கல்லூரி வலயமட்டக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இரண்டாமிடத்தை யாழ்ப்பாணக் கல்லூரியும், மூன்றாமிடத்தை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் பெற்றன.

வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசில்களை வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.சுந்தரசிவம் வழங்கிக் கௌரவித்தார். (72)

# ஸ்போர்ட்ஸ் ஏரோபிக்ஸ் அடுத்த ஆண்டு அறிமுகம்

(கொழும்பு)

எதிர்வரும் கல்வி ஆண்டுமுதல் இலங்கையில் உள்ள பாடசாலைகளில் ஸ்போர்ட்ஸ் ஏரோபிக்ஸ் விளையாட்டினை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாடசாலைகளில் தற்போது இடம்பெறும் உடற்பயிற்சியைப் போன்று இதுவும் பின்னணி இசையுடன் நடாத்தப்படும். சட்ட விதிகளுக்கு அமைய இதனை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச அங்கீகாரமும் பெறப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது.

தற்போது கல்வி அமைச்சில் இருபத்தி ஆறு விளையாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இது இருபத்திஏழாவது விளையாட்டாக பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் ஜிம்னாஸ்டிக் விளையாட்டுப் பொறுப்பதிகாரியான கல்வி அமைச்சைச் சேர்ந்த மில்ரோய் பெர்ணாண்டோ தெரிவித்தார். (31)

# அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் நியூஸிலாந்து அணி படுதோல்வி!



நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 156 ஓட்டங்களால் அபாரவெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 564 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த அவுஸ்ரேலிய அணி, நேற்றும் தொடர்ந்து ஆடியது.

ஜிலெஸ்பி - மக்ரா ஜோடி நேற்றும் தொடர்ந்து ஆடியது. எனினும் அணியின் ஓட்ட எண்ணிக்கை 585 ஆக இருந்தபோது அவுஸ்ரேலிய அணியின் கடைசி விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது.

92 பந்துகளில் ஒரு சிக்ஸர் 5 பவுண்டரிகளுடன் 61 ஓட்டங்களைப் பெற்ற மக்ராவின் விக்கெட்டை மார்ட்டின் வீழ்த்தினார்.

பந்துவீச்சில் மார்ட்டின் 5 விக்கெட்டுக்களையும், விற்றோரி 4 விக்கெட்டுக்களையும், மில்ஸ் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து இரண்டாவது இனிங்ஸில் விளையாடிய நியூசிலாந்து அணியினரால் அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சுக்களைச் சமாளிக்கமுடியவில்லை. இதனால் மளமளவென விக்கெட்டுக்களை இழந்தன.

றிச்சட்சன் - 4, சின் கிளெயர் - 0, பிளெமிங் - 11, ஸ்ரைரிஸ் - 7, அஸ்ரில் - 17, மக்மிலன் - 9, ஓரம் - 8, மக்கலம் - 8, விற்றோரி - 2, மார்ட்டின் - 0, மில்ஸ் ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இதனால் 76 ஓட்டங்களுக்கு நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 1 இனிங்ஸ் மற்றும் 156 ஓட்டங்களால் படுதோல்வி கண்டது.



இரண்டாவது இனிங்ஸ் பந்துவீச்சில் மக்ரா - 3, ஜிலெஸ்பி - 2, கஸ்பரோவிச் - 1, வோன் - 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக மைக்கல் கிளார்க் தெரிவுசெய்யப்பட்டார்.

# எமது இனத்தின் சொத்துக்கள் அழிவதை அனுமதிக்கமுடியாது

## ரவிராஜ் எம்.பி தெரிவிப்பு



இன்று யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஒழுக்கமின்மை அதிகரித்து வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனை நாம் எப்படித் தடுக்கப் போகின்றோம், எப்படிக் கட்டுப்படுத்துவது என ஆழமாகச் சிந்திக்க வேண்டும். எமது இனத்தின் சொத்துக்களாகிய மாணவர்களின் எதிர்காலம் சீரழிவதைப் பார்த்துக் கொண்டிருக்ககக்கூடாது என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்தார்.

அண்மையில் தென்மராட்சி வறணி மகா வித்தியாலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற அதிபர்களுக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

இன்று பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்கு மோட்டார் சைக்கிளில் வர ஆரம்பித்துவிட்டார்கள். மாணவர்கள் மத்தியில் தொலைக்காட்சி அலைவரிசை ஆக்கிரமித்துள்ளது. இது இன்று பெரும் சவாலாக அமைந்துள்ளது. பாடசாலை அதிபர்கள் மாணவர்களை தமது ஆதரவாளர்களாகப் பயன்படுத்தக்கூடாது.

மேலும பாடசாலைகளின் பௌதீக வளங்களை மட்டும் மேம்படுத்திக் கொள்வது தான் அபிவிருத்தி என அதிபர்கள், ஆசிரியர்கள் நினைக்கக்கூடாது. மாணவர்களை ஒழுங்கான பிரஜைகளாக்கும் பணியே இன்று முக்கியமானதாகும். எனத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா, பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினர். (122)

# திருடிய பொருட்களை கைவிட்டு தப்பிச்சென்ற திருடர்கள்!

## ஆனைக்கோட்டையில் சம்பவம்

கொக்குவில் மேற்கு, கேணியடி அப்பையா ஒழுங்கையில் வீடொன்றில் திருடிய பொருட்களைக் கைவிட்டுச்செல்லும் நிலைமை திருடர்களுக்கு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை தினத்தன்று இறைமாறன் என்பவரது வீட்டில் நடைபெற்றது.

வீட்டில் இருந்த பெறுமதி வாய்ந்த ரீ.வி, டெக், போன்ற பொருட்களைத் திருடிய திருடர்கள், அவற்றை வெளி ஒழுங்கைக்குக் கொண்டுசென்று வைத்துவிட்டு உறக்கத்தில் இருந்த குழந்தையின் காப்பையும் வெட்டி எடுத்தனர். அவ்வேளை, வீட்டுக்காரர்கள் நித்திரையிலிருந்து எழுந்து போட்ட கூக்குரலால் திருடிய பொருட்களை விட்டுவிட்டு கையில் அகப்பட்ட குழந்தையின் காப்புடன் திருடர்கள் தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்பு ஒழுங்கையில் எடுத்து வைத்திருந்த ரீ.வி, டெக் போன்ற பெறுமதியான பொருட்களை வீட்டுக்காரர் மீட்டெடுத்தார். (206)

# வல்வை மாவட்ட வைத்தியசாலை ஆற்றிவரும் சேவை பாராட்டுக்குரியது

## ஜி.ரி.இசற் இணைப்பாளர் உரை

(வல்வெட்டித்துறை)

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி மக்களுக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஆற்றி வரும்சேவை பாராட்டுக்குரியதாகும்.

இவ்வாறு நிகொட் நிறுவனத்தால் புதிதாக அமைக்கப்பட்ட சமையல் கூடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றிய ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபன இணைப்பாளர் வால்டல் கெல்லர் தெரிவித்தார். இந்த விழா வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

வாழ்டர் கெல்லர் தொடர்ந்து அங்கு உரையாற்றும்போது -

இந்த வைத்தியசாலைக்கு ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபனமும் உதவிகளை வழங்கியுள்ளது. இந்த வைத்தியசாலை மிகச் சிறப்பாகச் செயற்பட்டுவருவதனால் நோயாளர்கள் சிறந்த சேவையை பெற்றுவருகின்றனர். இந்தப் பகுதி மக்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பே இந்த வைத்தியசாலை சிறந்த சேவையை ஆற்றக் காரணமாகிறது.

இந்தப் பகுதிகளில் யுத்தம் நடைபெற்று மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து தற்போது சமாதானத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதையே ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபனம் இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வசதி, மலசல கூட வசதி, வீடுகளை அமைத்துக் கொடுத்தல், மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன்கருதி பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைத்துக் கொடுததல், பாடசாலைக்குத் தேவையான தளபாடங்களை வழங்கல் போன்ற நடவடிக்கைகளில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது என்றார்.

இந்த வைபவத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ். வசந்தகுமார், யாழ்.செயலக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் வி.வீரபத்திரபிள்ளை, இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம் திருநாவுக்கரசு, வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் ஆகியோரும் உரையாற்றினர். (17)

# நுளம்புகளை அழிக்கும் மீனினம்; தேவையானோர் தொடர்புகொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் என்றுமில்லாதவாறு நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் டெங்குக் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், யானைக்கால் நோய் என்பன ஏற்பட வாய்ப்புண்டு.

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்களில் ஒன்றான நுளம்புக் குடம்பிகளைப் பிடித்து உண்ணும் மீன் இனங்கள் சுன்னாகம் வாழ்வகத்தில் அமைந்துள்ள மீன் தொட்டிகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது அனைத்து நீர்நிலைகளிலும் நீர் தேங்கி நிற்பதால் அவற்றில் நுளம்புகள் முட்டையிட வாய்ப்புண்டு.

இதைக் கருத்தில்கொண்டு சுகாதாரத் திணைக்களம் கப்பி (Guppy) இன மீன்களை நன்நீர் நிலைகளில் விட்டு அவற்றின் பெருக்கத்தை அதிகரிக்கச்செய்து வருகின்றனர். இந்த வகை மீனினங்களைப் பெற்றுத் தமது கிராமங்களிலுள்ள கைவிடப்பட்ட கிணறுகள், குளங்களில்விட விரும்புவோர் சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (101)

# ரயில் பயண அனுமதிச்சீட்டுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது

(கொழும்பு)

விடுமுறைக்கால ரயில்பயண அனுமதிச் சீட்டுக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்குக் கடந்த பல வருடங்களாகக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பாக இலங்கை ஆசிரியர் சங்கம்- மாகாண ஆளுநரிடம் தொடர்பு கொண்டு முறையிட்டதையடுத்து மாகாண பொது நிர்வாகச் சுற்றறிக்கை 4/99 இற்கு அமைவாகச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களிலுள்ள அலுவலக ஊழியர்களுக்கு இப்படிப்பட்ட கொடுப்பனவுகள் காலதாமதமின்றி வழங்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (122)

# நெடுந்தீவு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

நெடுந்தீவுப் பிரதேசத்திலுள்ள ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கும், முன்பள்ளிச் சிறார்களுக்கும் கடந்த வாரம் பெரியகல்லாறு மட்டக்களப்புப் பிரிவு மறைநாத்தா சுவிஷேச சபை என்ற மத அமைப்பினர் பாடசாலை கற்றல் உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

சுமார் 300 மாணவர்களுக்கும், சிறார்களுக்கும் கொப்பிகள், பென்சில்கள், தண்ணீர்ப் போத்தல்கள், உணவுப் பெட்டிகள் எனப் பல பொருட்களை சுவிஷேச சபைப் போதகர் ஆர்.யேசுதாசன் தலைமையில் வந்த குழுவினரே வழங்கினர்.

கனடாவிலுள்ள சிருஷ்டிக்கும் சுவிஷேசத்துக்கான ஸ்தாபனத்தினரது அனுசரணையுடனேயே இந்தப் பொருட்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (113)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ம.தர்ஷாணன்
முகவரி : கொக்குவில்

ஐந்தாவது அகவையில்



பெயர் : ஜெ.லக்ஷணன்
முகவரி : நயினாதீவு

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் இரவுநேரங்களில் கலாசார சீர்கேடு

2000 ஆம் ஆண்டின் இடப்பெயர்வால் நாகர்கோயில் மகா வித்தியாலயம் தற்போது, வடமராட்சியில் புலோலி றோமன் கத்தோலிக்க பாடசாலை இயங்கிவந்த கட்டடத்தில் இயங்கிவருகிறது. இந்தப் பாடசாலையில் ஒரேயொரு கட்டடம் தான் காணப்படுகிறது. அதில்கூட சிலர் கலாசாரச் சீர்கேடுகளை நடாத்தி வருகின்றனர்.

இங்கு காணப்படும் கட்டடப் பகுதிகளில் இரவு வேளைகளில் மது அருந்தும் இடமாகப் பயன்படுத்தும் சிலர் தகாத வார்த்தைகளை மலசல கூடங்கள் உட்பட சுவர்களிலும் எழுதிவிடுகின்றனர். இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இங்கு கல்வி கற்பிக்கும் ஆண் ஆசிரியர்கள் பாடசாலை நேரத்துக்கு முன்பாக வந்து காணப்படும் தகாத வார்த்தைகளை அழித்தும் வகுப்பறையைச் சுத்தம் செய்தும் வருகின்றனர்.

இந்தப் பாடசாலைக்குக் காவலாளிகள் எவரும் இல்லாததால் இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாமலுள்ளது. இது தொடர்பாக உரியவர்கள் தகுந்த நடவடிக்கையை எடுத்து எமது துன்ப நிலையைப் போக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (12)

# கூட்டுறவுச்சங்க வெள்ளிவிழாவை முன்னிட்டு மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்குச் சித்திரம் வரைதல் போட்டியும், தரம் 6 முதல் 9 வரையான மாணவர்களுக்குப் பொது அறிவுப் போட்டியும், தரம் 10 முதல் உயர்தரம் வரையான மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டியும் நடாத்தப்படவுள்ளது. போட்டிகள் அனைத்தும் நெடுந்தீவு மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள வெள்ளி விழா நிகழ்வையொட்டி நெடுந்தீவுப் பகுதியில் அதிஷ்டலாபச் சீட்டுக்கள் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தால் விற்பனைசெய்யப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)




உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்புதின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டொக்டர் சிவபாலன் சிவசுதன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், 'வித்தியா' சஞ்சிகை வெளியீட்டின்போது கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் கே. குணசிங்கம் ஆய்வுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (82)




# போராட்டத்தில் இணைய வேணும்!

சிறுகதை

எஸ்.ஐ.மதன்



ஆகாஷ்... நான் உன்னிட்டத்தான் வர வேணும் எண்டு நினைச்சன். நீயே வந்திட்டாய். ஒரு முக்கியமான விடயம் கதைக்கவேணும். இண்டைக்கு உனக்கு ஏதேனும் அலுவல் இருக்கா...?"

என்னடா பீடிகை பலமாயிருக்கு யாரையாவது தெருவில் கண்டிட்டாயா சரி சரி எழுதின கடிதத்தைத் தா...! கொண்டுபோய் குடுத்திட்டு, திருப்ப வேண்டிக்கொண்டுவாறன் போனஸா ஏதேனும் தந்தால்... என்ன செய்யிறது நண்பனுக்காகத் தானே... தாங்கிக் கொள்ளுறன்.. கெதியாத் தாடா... விதி என்னை வேகமாக அழைக்கிறது!

இல்லடா ஆகாஷ் இது விளையாட்டல்ல. நான் உன்னட்டை ஒன்று கேக்க வேணும். நான் எங்கேயாவது போனால், எங்கட குடும்பத்தில் எந்தப் பிரச்சினையும் வராமல் பார்த்துக்கொள்ளுவியாடா...

மச்சான் ஏதோ முடிவெடுத்திட்டார் போலத் தெரியுது. இனித் தன்ர முடிவை மாத்தமாட்டார். என்ன விசேஷம் கண்ணா? எவளாவது கல்யாணத்துக்குச் சம்மதிச்சிட்டாளா...? டேய் மச்சான் நானும் உன்ர நண்பன் தானேடா, எனக்கும் சேர்த்துப் பாரண்டா!

ஆகாஷ், விளையாடறதுக்கு நேரம் காலம் இருக்கு. நான் இப்ப சீரியஸாகக் கதைச்சுக்கொண்டு இருக்கிறன். என்ர பேச்சைக் கேட்கிறதா இருந்தால் கேள். இல்லையெண்டால் வந்த வேலையை முடிச்சுக்கொண்டு கிளம்பு. இல்லை இல்லையடா சொல்லு சொல்லு...

நான் நேற்று இயக்க அக்காக்களோட சேர்ந்து பரப்புரைக்குப் போனானெல்லோ... அப்பஒரு சின்னப் பெண்பிள்ளை ஒன்று எங்கட பரப்புரையைக் கேட்டு இயக்கத்தில்சேர வந்தவள். அப்ப நான் விளையாட்டா "என்ன தங்கச்சி உங்களாலை துப்பாக்கியைத் தூக்க முடியுமோ...?" என்று கேட்டன். அதுக்கு அந்தப் பிளளை-அண்ணா, என்றைக்கோ ஒருநாள் எனக்கு மரணம் வரத்தான் போகுது. நான் சாகும்போது செல்வியாவோ அல்லது திருமதியாகவோ சாகிறதைவிட வீரவேங்கையாகவோ கப்டனாகவோ சாகத்தான் விரும்புறன்" என்று சொன்னாள். அப்ப அந்தப் பெண்ணின்ட முகத்தில தென்பட்ட ஒளியை நீ பார்த்திருக்கவேணும், வாழ்நாளில மறக்கமாட்டாய்...!

நண்பன் கூறிமுடிக்குமுன், சரியடா அதுக்கு நீ ஏன் கவலைப்படுகிறாய். உனக்கு இது பழக்கமானதுதானே. நீ எத்தனையோ பரப்புரைகளுக்குப் போயிருக்கிறாய் தானே, பிறகு ஏன் இதை மட்டும் யோசிக்கிறாய். விட்டுத்தள்ளு. சும்மா நீயும் குழம்பி என்னையும் குழப்பாம எழும்பி வேலையைப் பார் ம்... நிவேதன் இண்டைக்குப் பின்னேரம் ரியூசனடியிலை தனுஷா சந்திக்கச் சொன்னவள். ஏனெண்டு தெரியேல்லை. கனநாளாய் உன்னைக் காணேலையாம். இண்டைக்குக் கட்டாயம் வந்து சந்திக்கச் சொன்னவள். நான் வீட்ட போய்ட்டு வாறன். என்று கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானான் ஆகாஷ்.

5 மணி ஆகியது. வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான் நிவேதன். நேரமோ நெருங்கிக்கொண்டிருந்தது. ஆகாஷை இன்னும் காணவில்லை. சற்றுப் பிந்தினாலே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு தனு நிற்பாள். என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தவனை, வாசலில் நண்பனின் சைக்கிள் மணிச் சத்தம் நினைவுலகுக்கு அழைத்து வந்தது.

ஆகாஷை உள்ளே வருமாறு அழைத்தவன் "ஆகாஷ், நேரம் போயிட்டுது சைக்கிளை உள்ளேவிட்டு பூட்டிவிட்டுவா. இருவரும் மோட்டார் சைக்கிளில் போவோம். எனக் கூறியவனாய், தனது மோட்டார் சைக்கிள் சாவியை நண்பனிடம் கொடுத்துவிட்டு உள்ளே சென்றவன், தாயிடம் கூறிவிட்டுப் புறப்பட்டான். சில நிமிட பயணத்தில் தனுஷா நிற்குமிடம் சென்றடைந்தனர்.

எதிர்பார்த்ததுதான். நிவேதனைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக்கொண் டாள் தனுஷா. மணிக்கட்டைத் திருப்பி நேரம் பார்த்தான் ஆகாஷ். 5.20 ஐக் காட்டியது. மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கிய நிவேதன், தனுஷாவின் அருகே சென்றான்.

'தனுஷா... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க. தனுஷா... தனு... பிளீஸ்டா...!" நிவேதனின் கெஞ்சலை ரசித்துக்கொண்டிருந்தவள், இதற்குப் பிறகும் அடம்பிடிப்பதில் அர்த்தமில்லை என்று நினைத்தவளாய், அவனை நோக்கித் திரும்பினாள். எனினும் தனது கௌரவத்தை விட்டுக்கொடுக்க விரும்பாதவளாய் முகத்தில் பிடிவாதத்தை கஷ்ரப்பட்டு வரவழைத்துக்கொண்டு என்ன? என்று வினாவினாள்.

தனு உன்னோட கொஞ்சம் பேசணும். முக்கியமான விசயம். இதில் நிண்டு பேச முடியாது. அந்தக் கோவிலடிக்குப் போவமா...? பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்த நிவேதனுக்கு எதுவும் கூறாமல் கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினாள் தனு. நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துவிட்டுப் பின் தொடர்ந்தனர்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் கோவில் வெறிச்சோடிப்போய் இருந்தது. உள்ளே சென்றவள் இறைவனை வணங்கிவிட்டு, அங்கு ஒரு ஓரமாய் இருந்த பெரிய தூணொன்றின் அருகில் சென்று அமர்ந்தாள். வழமைபோல் சற்றுத்தள்ளி அமர்ந்து கொண்டான் நிவேதன். காதலர்களுக்கிடையில் சிவபூஜையில் கரடிபோல் - தான் எதற்கு என்று எண்ணியவனாய் நகர எத்தனித்தான். ஆகாஷை கைப்பற்றி இழுத்த நிவேதன், தன்னருகில் இருத்திக் கொண்டான்.

சில நிமிடங்கள் மௌனமாக கழிந்தன. தனுவைத் தவிர தனக்கு வேறு உலகம் இல்லை என்பது போல அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் நிவேதன். அவன் தன்னை அவதானிப்பதை அறிந்தும் அறியாதவள் போல், அருகிலிருந்த புல்வெளியில் சிந்திய தானியங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்த கோபுரப் புறாக்களை ரசித்துக் கொண்டிருந்தாள் தனுஷா. சற்று நேரம் எதுவுமே பேசாதிருந்த ஆகாஷ் - "நிவேதன் ஏதோ செல்லவேண்டும் என்றாயே. என்ன விசயம்" என்றான். இருவரும் தம்மைச் சுதாகரித்துக் கொண்டனர்.

தன் நண்பனிடம் - ஆகாஷ், இத்தனை நாள், நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு எந்த அர்த்தமும் இருந்ததா எனக்குத் தெரியலை. ஆனால், இனி நான் வாழப்போற வாழ்க்கைக்கு நிச்சயம் ஒரு அர்த்தம் இருக்கும். நான் நாளைக்கு இயக்கத்துக்குப் போகப் போறன்"

சடாரென்று திரும்பினாள் அவள். அதிர்ச்சி அவள் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது. "சும்மா விளையாடாதீங்க" என்று கூறியவள் ஆகாஷைப் பார்த்தாள். அவளது பார்வையில் தொக்கிநின்ற கேள்வியை அவதானித்தவன், 'என்னடா நிவேதன் விசர்க்கதை கதைக்கிறாய். தெரிஞ்சுதான் கதைக்கிறியா அல்லது தனுஷாவைச் சமாளிக்கிறதுக்காகச் சொல்லுறியா...? என்னடா நடந்தது...?

"ஆகாஷ், இதுவரை எந்தப் பிரச்சினையும் எனக்கு வரேல்ல, ஆனால், நாளைக்கு என்ன நடக்குமோ... எப்ப சமாதானம் குழம்பிப் பிரச்சினை வருமோ... என்று பயந்து பயந்து சாகிறதைவிட, என்ன நடந்தாலும் எதிர் கொள்வேன் என்ற நம்பிக்கையோடு வாழுற வாழ்க்கை தான்டா எனக்குப் பிடிக்கும். அதனால் தான் நான் இந்த முடிவை எடுத்தனான்"

உனக்கு என்ன... பணமில்லையா.. படிப்பில்லையா.. அந்தஸ்தில்லையா... அழகில்லையா... என்னதான் இல்லை? அப்பா அம்மா, தம்பி தங்கைகள் என்று சந்தோஷமான குடும்பம். நீ நினைத்ததெல்லாம் வாங்கித்தாற அளவுக்கு உன் அப்பாவிடம் பணம் இருக்கு. நல்லாப் படித்து பெரிய பதவியை வகிக்கக் கூடிய அளவுக்கு உன்னிடம் புத்திசாலித் தனம் இருக்கு. யார் பார்த்தாலும் ஆசைப்படுற அளவுக்கு கவர்ச்சியான அழகிருக்கு. அத்தனைக்கும் மேலாக அழகெல்லாம் சேர்ந்த பேரழகியான ஒரு காதலி கிடைச்சிருக்கிறாள். பிறகு ஏன்டா இந்த முடிவெடுத்தனி...?

உனக்காக உயிரையே கொடுப்பாளேடா தனு. அவளை விட்டிட்டு இயக்கத்துக் போகப் போறதாகச் சொல்லுறாயே... உனக்கென்ன பைத்தியமா...? தனது மன ஆதங்கத்தையெல்லாம் கொட்டித் தீர்த்தான் ஆகாஷ்.

தன் நண்பன் பேசிமுடிக்கும் வரைக்கும் அமைதியாக இருந்த நிவேதன். 'ஆகாஷ் உன்னோட மனநிலை எனக்குப் புரியுது. ஆனா உன்னை மாதிரியே எல்லோரும் நினைச்சிருந்தா, எங்கட நாட்டுக்காக தங்கட உயிரைத் தியாகம் செய்த போராளிகளால்தான், பல இளைஞர்களும் பெண்களும் இராணுவத்தின்ர கையில் சிக்கிச் சீரழிவதைத் தடுக்க முடிந்தது.

இப்படியொரு போராட்டம் நடைபெறாவிட்டால், பின்னாளில் ஒரு காலத்தில் நம்ம நாட்டில கணவனை இழந்த விதவைகளும், கற்பைப் பறிகொடுத்த பெண்களும், பிள்ளைகளைப் பிரிந்த தாய் தந்தையர்களும்தான் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இன்றைக்கு திறந்து கிடக்கிற வீட்டுக் கதவுகள் எல்லாம் நம்ம போராளிகளும் அவர்களை வழிநடத்துற தலைவரும் இல்லாட்டிப் பூட்டித்தான் இருக்கும். இண்டைக்கு எமக்கு நிம்மதி இல்லாமை இருக்கலாம், ஆனால் சந்தோஷம் நிறையவே இருக்கு இந்த சந்தோஷம் நிலைத்து நிக்கணும் என்றா.. நிம்மதியும் நம்ம நிலங்களும் நிரந்தரமாக எமக்குக் கிடைக்கவேணும் எண்டால் இந்த நாட்டில இருக்கிற ஒவ்வொரு இளைஞர் யுவதியும் இந்தப் போராட்டத்தில் இணையவேணும், இந்த நாட்டின்ர ஒவ்வொரு மக்களும் எதிரியை எதிர்கொள்ளக் கூடிய தைரியத்தோட வாழணும்...

தனது காதலியை நோக்கித் திரும்பியவன், அவள் கண்களில் வழிந்த கண்ணீரைக் கண்டதும் சற்று நிலை குலைந்தான்.

தனு அழாதேடா...! நீ அழுதா... வேண்டாம் தனு அழாதேடா...! அவன் சொல்லச் சொல்ல அவளது விம்மல்கள் அதிகரித்தனவே தவிர குறையவில்லை.

"நிவேதன் நான் உங்களை எந்தளவுக்கு விரும்புகின்றேன் என்று சொன்னால் புரியாது. சொல்லவும் முடியாது. நான் உங்கட கையைத் தொட்டதுக்கே அதைத் தட்டிவிடுற நீங்க என்னோட காதலை எப்படிப் புரிந்து கொள்ளப் போறீங்க. பெண்களோட கூடப் பேசிப்பழகாத என்னை, எல்லோரோடையும் சகஜமாகப் பேசிச் சிரிக்கப் பழகவைச்சு, என்னோட அம்மா, அப்பாகூட எனக்குத் தராத சந்தோஷத்தை தந்து, உங்களைப் பார்க்கிற ஒவ்வொரு நிமிடமும் - இப்படியொரு காதலனைப் பெறக் குடுத்துவைத்திருக்க வேண்டும். என்று பெருமிதப்பட வைத்துவிட்டு, மொத்தமா எல்லாத்தையும் திருப்பிக் கேட்டா நான் என்ன செய்யிறது. பிறகு ஏன் என்னைக் காதலிச்சனீங்கள்... இப்ப பிரியப் போகிறேன் என்று சொல்றீங்க.

நீங்கள் ஏதாவது முடிவெடுத்தா, நானும் உங்க முடிவையே எடுக்க வேண்டிவரும். உங்களை விட்டிட்டு நான் மட்டும் எதற்காக இங்கே வாழணும். நானும் உங்களோடே இயக்கத்துக்கு வாறன்" என்று கூறியபடி அவனது கையை இறுகப் பற்றியவளை சிரித்தபடி நோக்கினான் நிவேதன்.

"தனு... எது நடக்குமோ அதுதான் நடக்கும். நன்மையோ தீமையோ எது வந்தாலும் அதை தாங்கித்தான் ஆகவேண்டும். புறப்படு உனக்கு நேரமாகிறது..." என்று எழுந்து கொண்டான். அருகில் கடையில் நின்ற ஆகாஷை அழைத்தவன் ஆகாஷ் தனு வீட்டை தேடுவினம். நேரமாகுது புறப்படுவோம் என்றவன் "ஆகாஷ் முகத்தில் சலிப்பைக் காணவும், என்னவென்று விசாரித்தான்.

"இல்லடா நீங்க இருவரும் இப்படியே ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றால் எப்படி வீட்டபோறது என்றுதான் யோசிக்கிறன்" என்றதும், முகத்தில் வெட்கம் இழையோட வாசலை நோக்கி நடந்தாள் தனு.

புறப்படும் முன் ஆகாஷை நோக்கி" அண்ணா போயிற்றுவாறன்" என்று கூறியவள் நிவேதனையே பார்த்துக்கொண்டு இடம்விட்டு அகன்றாள். அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தவன் அவள் திரும்பிக் கையசைப்பதைக் கண்டு தானும் கையசைத்துவிட்டுத் திரும்பினான். அவனிடமிருந்து பெருமூச்சொன்று மெதுவாக வெளிவந்தது.

உணவுடன் அருகில் வந்த தாயாரிடம் - அம்மா நான் வெளிக்கிட்டு நிக்கிறன் நீங்களே ஊட்டிவிடுங்க என்றான். உணவூட்டிக்கொண்டிருந்த தாயைப் பார்த்து "அம்மா வீட்டுக்கொருவரை நாட்டுக்காகப் போராடக் கேட்கிறார்கள், நான் நாட்டுக்காகப் போராடப் போறன். வீட்டுக்காக அப்பாவும் தம்பியும் இருக்கிறார்கள் தானே".. என்று வேடிக்கை போல் கேட்டவனை நீ நாட்டுக்காகவும் போக வேண்டாம், வீட்டுக்காகவும் கஷ்ரப்படவேண்டாம் அதெல்லாம் அப்பா பார்த்துக்கொள்ளுவார். வெளியே போய்விட்டுக் கெதியா வா. நேரம் போனா அப்பா ஏசுவார்" என்று கண்டிப்பான அன்புடன் வழியனுப்பி வைத்தாள்.

காலையில் சென்றவன் இரவாகியும் வீடு திரும்பவில்லை. என்னவோ ஏதோ வென்று தாய் மனம் துடித்தது. தன் கணவன் வந்ததும் நிலைமையைச் சொன்னாள். தந்தையோ மகனது நண்பன் வீட்டுக்குப் புறப்பட்டார்.

"அங்கிள், நிவேதன் இண்டைக்கு விடியத்தான் வந்திட்டுப் போனவன். ஆனால், எங்கபோறன் என்று சொல்லிவிட்டுப் போகேல்ல. என்றவன் சற்றுச் சிந்தித்தபின் "நேற்று என்னோட பேசும் போது... இயக்கத்துக்குப் போகப்போறன் எண்டு சொன்னவன்.. எதுக்கும் விசாரித்துப் பார்ப்பம்" என்று கூறியவன் அவருடன் புறப்பட்டான்.

அவனை எல்லோரும் தேடினார்கள். அவனது தாயும் தந்தையும் அருகிலிருக்கும் இயக்க முகாம்களுக்கு சென்று பலமுறை கேட்டும் அவனைச் சந்திக்கவே முடியவில்லை.

அன்று புறப்பட்டுச் சென்றவன், சென்றவன் தான். மறுபடி திரும்பவேயில்லை. எவருக்குமே கூறாமல் அவன் புறப்பட்டுப் போயேவிட்டான்.

கையில் சிறிய பிளேட் வெட்டினாலே தாங்கமாட்டாதவன், இந்தக் காடு மேடெல்லாம் திரிந்து தன்னைக் காயப்படுத்த தாங்க மாட்டான். ஒரு முறைக்கு ஓராயிரம் முறை தன் உடல் மீது அக்கறை கொள்பவன் அதிக நாள் தங்கியிருக்கமாட்டான். நிச்சயம் திரும்பி வருவான் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். அவன் நண்பன் ஆகாஷுக்கு மட்டும் தான் அவனைப் பற்றி நன்றாகத் தெரியும். எதை நினைத்தாலும் அதை எப்படியாவது நடத்தி முடிக்கும் தனது நண்பன் மீண்டும் வரும் போது, தன்னுடைய இலட்சிய முடிவோடுதான் வருவான் என்று அவன் காத்திருந்தான்.

சில மாதங்கள் கடந்தபின் நிவேதனிடமிருந்து அவன் தாயாருக்கு கடிதம் ஒன்று வந்தது.

அன்புள்ள அம்மாவுக்கு,

**புனிதமான பாதையொன்றில் விடுதலை வேண்டி தலைவனின் வழி நடத்தலில் உரிமை மீட்கப் புறப்பட்ட உங்கள் மகன் எழுதும் மடல்,**

**அம்மா! நான் இப்போது கடற்கரும்புலியில் இணைந்திருக்கிறேன். தற்போது உங்கள் எவரையும் வந்து பார்க்கமுடியாத தூரத்தில் இருக்கிறேன். ஆனால், வெடியோசைகள் ஓய்ந்த ஓர் அதிகாலையில் பட்சிகளின் சங்கீத இசையினூடே உங்களிடம் நான் வருவேன். அல்லாவிடின் அந்த விடியலை நோக்கிப் புறப்பட்டவர்களில் நானும் ஒருவனாக வீரமரணமடைந்த செய்தி உங்களைத் தேடிவரும். அதுவரை என்றும் உங்கள் பாசத்துடனும், என்தலைவனின் ஆசியுடனும் பயணித்துக் கொண்டிருப்பேன்.**

# மாவீரன்



விடைபெறும் நாளில் எத்தனை களங்களை நீ சந்தித்திருக்கின்றாய். ஒவ்வொரு களமும் சென்று திரும்பி வருவாய் என்று தெரியாத அந்த இடங்களுக்குள் ஒரு தவிப்பு. நீ களத்தில் எந்தப் பக்கம் நின்றாலும் மறுபக்கம் உன்னைக் காணாமல் தேடிக்கொண்டே இருக்கின்ற சூழல் உன்னுடன் பழகியவர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது.

தன் பிள்ளைகளுக்கு மேலாக உங்களுக்குச் சோறு ஊட்டியதால் அன்றுதான் எத்தனை தாய்மார்கள் தாய்மை அடைந்தார்கள். பங்கிட்டாலும் காணாமல்போகும். ஒவ்வொருநாள் உணவில் அதற்குள் உனக்கு ஒரு பங்கு. நீ வருவாய் என வைத்திருந்தபோதுதான் தாய் மண் உன்னைப் பிள்ளையாக்கியது.

இன்றைய நாட்களிலும் உன்னை எதிர்பார்த்தவண்ணமே இருக்கின்றார்கள். நடுச்சாமம் 12 மணிக்கும் கதவு தட்டும் சத்தம் கேட்கும் என்று...

துப்பாக்கியுடன் விழிக்கும் எதிரியின் ஒவ்வொருநாள் தூக்கம். எதிரிக்குச் சவாலாக அமையும் நாட்களில் உன்னால் மட்டும் எப்படி முடிந்தது. எதிரியின் மையப் பகுதியில் வெடி குண்டுடன் நீ.

போராளிகள் இப்படித்தான் இருப்பார்கள். எதிரியின் ஊகம். கறுப்பாகத் தடித்த உடல் அமைப்புடன் எதற்கும் பயப்படாதவன். வரிசைப்படிவிட்டு ஒவ்வொருவராகச் சோதனை செய்து கைது செய்யப்பட்ட பல நூறு இளைஞர்களில் எப்படி உன்னை விட்டார்கள். அடையாளப்படுத்த முடியாத உருவில் நீ இருந்து கொண்டு எங்களை அடையாளப்படுத்துகின்றபோது எந்த புறநானூற்றிலும் இல்லாத வீரம் உன்னிடம் இருக்கின்றது.

கண்டிப்பாக இந்த இடத்தில் நீ ஒருவன் தான். உன்னைச் சுற்றி நூற்றுக்கணக்கான படைகள். சுற்றி வளைப்புக்குள் பலநூறு குடும்பங்களும் அடங்க. எதிரியைச் சுட்டுவிட்டுத் தப்பிக்க உன்னால் முடியும். ஆனால் அந்தச் சண்டையில் பல எதிரி செத்தால் மக்களுக்குப் பாதிப்பு என்றபோது துப்பாக்கியைக் கட்டி அணைத்த வாறு சைனைட் குப்பியை நீ கடித்தபோது உயிர் பெற்றார்கள் மக்கள்.

எந்த இடமானால் என்ன. சண்டையில் எதிரியின் குண்டில் பல நூறு மக்கள் சாக. உனது குறி மட்டும் தவறாமல் எதிரி மட்டும் சாவான்.

எதுவும் என்னுடையதல்ல. பொதுவாக்கி எல்லோரும் பயன்படுத்தவும் என்று சொல்லாத உனது செயலில் பார்க்கிறேன். உனது ஒவ்வொரு நடவடிக்கையும் மக்களைப் பாதிக்காதது தான்.

அதனால்தான் இன்று தேசிய இராணுவம் ஆனாய்.

போர்க்களத்துக்குத் துப்பாக்கியுடன் வந்தாலும், பேச்சுவார்த்தை மேசைக்குப் பேனாவுடன் வந்தாலும், வரவேற்கக் கூடியதாக இருக்கின்றது. உன்னை அறிந்தபோதுதான் விடுதலையை அறிந்தோம்.

அதே களத்தில் நின்ற இன்னொரு போராளி. நீ வீரமரணம் அடைந்தபோது உனது புகழுடம்பை உனது வீட்டுக்குக் கொண்டுசென்றபோது அவனுடைய சட்டையைக் கிளித்து, அடித்து அவனையும் மார்போடு அணைத்து அழும் தாயின் பிள்ளையான போது தான் நீ சாகவில்லை.

# தீபம்

செல்வா

இருளின் ஒளியைக் காண்கின்றபோது பகலில் உனது அருமை தெரியவில்லை. அறியாதவர்களுக்கு மட்டும் சுட்டுக் கொண்ட விரலில் மீண்டும் சுடும். தெரியப்படுத்த மட்டும் நீ தியானதால் விடுதலைப் பாதை எமக்கு வழிவிட்டது. அதனால் உன்னைப் போற்றினோம். அது வரையில் தீபமாக உன்னை வீட்டுக்குள்ளும் நாட்டுக்குள்ளும் ஒளிரவிட்ட போது நீயே பொய்யானாய்.



எமக்கான சொந்தஇடம் அந்த இடம். சுதந்திரமான, அமைதியான சூழலைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையில் உன்னை ஒளியேற்றினோம். புயல் காற்றிலும், அடை மழை யிலும் அணையாது எரிந்தபோது மட்டும் எமது மண்ணில் இன்றும் தீபமாய் எரிகின்றாய். குறுகிய பார்வைக்குள் மறையும் எமது வாழ்வை வெளிச்சம் காட்டி உணர வைத்தபோதுதான் உன்னை அடையாளப் படுத்தி னாய்.

வெளிச்சத்துக்குள் நின்று இருள் தெரியாத வரையில் இருள் அருகில் வராது. ஆனால் தூர நின்றாலும், மிக அருகில் நின்றாலும் பார்த்துக் கொண்டு நின்று பின்னோக்கையில் உடனே வந்து சூழும் ஆதிக்கம் வெளிச்சத்தைவிட இருளுக்குக் கூடவாக இருக்கின்றபோது எத்தனை தடவைகள் எமது வாழ்வு இருளுக்குள் தள்ளப்படுகின்றது.




வரிசையாக நீ நிற்கிறாய். ஆனாலும் ஒழுங்குபடுத்த முடியாத ஒரேமாதிரியான அளவில் ஒளிர்கின்ற உன்னை வேறுபடுத்தமுடியாத போது எவற்றுக்கும் இல்லாத துணிவு உன்னிடம் உள்ளதனால் எல்லோரும் ஏற்றுகின்றோம். மாவீரர் கல்லறை வாசல்படி வந்து தீபமாய் ஒளிர்கின்றபோது வீரர்கள் உருவம் ஒளியின் நிழலில் ஈழமாய்ப் பரவி நிற்கின்றது.

உனக்கானதுதான் கார்த்திகை மாதம். ஆனால் எமக்கானது என்றபோதுதான் கூடுதலாகப் பிரகாசிக்கின்றாய். ஆயிரம் ஆயிரம் கண்ணீர்த்துளிகளில் நனைந்ததால்தான் மழையில் கூட எரிகின்றாய். அரண்களுக்கூடாக இரவு பகல் விழித்திருந்து முதல் அடியில் முதல் எதிரி செத்த துப்பாக்கியின் முதல் குண்டு பெருமையடைந்த போது எதிரியின் கனரக ஆயுதங்களும் செயல் இழந்துபோன அன்றிலிருந்து இன்று வரை தீபமாய்ப் பிரகாசித்து எரிகின்றாய்.

எதிரியானவன் எதையும் முழுமையாகக் கையாளவுமில்லை. விட்டுவிட்டு ஓடியபோது தான் மீண்டும் முழுமையடைந்த துப்பாக்கியிடம் மட்டும் விடுதலை வீரனின் சூடு தெரியும். எனது வீட்டின் வெளிச்சம் பெருமையறியாதபோது பக்கத்து வீட்டில் இருந்து பிரகாசிக்கும் ஒளியானது எனது வீட்டின் யன்னலூடே உள் வந்து என்னைத் தட்டிப்பார்க்கும் போதுதான் என்னை அறிகிறேன். தீபமாய் உணர்கிறேன்.

எத்தனை காலங்கள் வீட்டின் வாசலுக்கும், சுவாமி அறைக்கும், கிணற்றடிக்கும் கார்த்திகை விளக்கானாய். முதன் முதல் வீரமரணம் அடைந்த மாவீரனின் நாளில் அதிகப்படியாக உன்னைப் பேசவைத்த அன்றைய நாளில் தான் உயிர் பெற்றாய்.

இருண்டுபோன நாலு புறமும் பூட்டி அடைக்கப்பட்ட சூழலில் பற்றி எரிந்த போதுதான் ஒளியில் உனது முகம் தெரிந்தது. அன்றிலிருந்து உனது பெருமதி அறிந்த நாளில் இருந்து தீபமாக ஒளிர்கின்றாய். பாதைகாட்டிச் சென்றவர்களுக்காக மட்டும் ஒளிரட்டும்.

# ஒரு காத்திருப்பின் ரணம்



காத்திருப்பின் நொடிகளில்
உயிர் துடிப்பு
தனித்துக் கிடந்தே
நெஞ்சம் உடைகிறேன்

வேரினைத் தேடும்
விழுதாக என் வாழ்நாட்கள்
தொலைந்து போகின்றன.

இமைகளின் ஓரங்களில்
எப்போது கூட இந்தப் பாரம் – ஏன்
விடியும் இரவுகள் ஒவ்வொன்றும்
எனைக் கொன்று கொன்றே
விடிகின்றன.

பயங்கரவாதப் பட்டத்தோடு
சிறைக்குள் முடக்கப்பட்ட
அப்பா நீ எங்கே...?



சமாதானக் கதவுகள்
திறக்கப்பட்ட போது
யார் யார் எல்லாம்
வந்து வந்து போனார்கள்
ஆனால் நீ மட்டும்
வந்தாயில்லையே.

என் மன வெளியில்
நம்பிக்கை இலைகி
வெறுமையாகிப் போனது.

எல்லாமே புரிந்து விட்டது
போன்ற உணர்வு.

எங்கள் விலங்குகள் இன்னும்
உடைக்கப்படவில்லை
உடைக்கப்படும் வரை
நீ வரப்போவதுமில்லை.

ஷி.கலைப்பிரியா



# மாற்றம்

எந்தன் தசைக்கூடு
எந்தன் தலை, கால்கள்
எந்தன் உணர்வு, செயல்
எதிலும் உயிர்ப்பின்றி
எந்திரமாய் வாழ்ந்தே எனக்குப் பழக்கம்...
உந்தன் அறிமுகத்தின்
முந்தைக் கணம் வரைக்கும்,

அந்த ஒரு கணத்தில் – மந்திரமாய்
வெட்டும் விழிக்கணையால்
விழித் தொருகால் நீ பார்த்தாய்,
சட்டென்றேன் தேகம்
சிலிர்த்து அடங்கியது,
நித்திரையில் ஆழ்ந்திருந்த நெஞ்சின் உயிர்ப்பு –
எனுள்

நெட்டி முறித்து நிமிர்ந்து
நடம் ஆடியது,
உந்தன் எடுப்பும்
உடலின் நெளிவுகளும்
எந்தன் உணர்வுகளில்
செந்தளிப்பை ஏற்றியது,
உந்தன் அருகிருப்பென் உயிரணுக்கள் யாவையுமே
கொந்தளிப்பி வாழ்த்தியது
மோகனமாய் உன் உதட்டு முறுவல்
எனை மாற்றி முழு மனிதனாக்கியது

உந்தன் உரையாடல்,
உந்தன் உணர்வோட்டம்,
உந்தன் சிறு ஊடல், பொய்க்கோபம் – யாவையுமே
எந்தன் மனத்தினையோர்
மலர்க் காடாய் மாற்றியது.
இப்படியாய் மொத்தத்தில்
என்னுள் உறைந்தயர்ந்த என்னை எழுப்பி உடன்
உன்னுள் சிறை அடைத்தாய்,
உன்னை எனக்களித்தாய்!

ஜெ.பிரேம்குமார்.

# தேசியத் தலைவரின் சிந்தனையின் குரலாக புலிகளின் குரல் வானொலி விளங்குகின்றது

## - தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்



(கிளிநொச்சி)

தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனையில் உருவாகி - அடக்கப்பட்ட எமது மக்களின் குரலாக, புலிகளின் குரல் நிறுவனம் செயற்பட்டு வருகிறது என, தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நேற்றுமுன்தினம் புலிகளின் குரல் வானொலியின் 14ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது தெரிவித்தார்.

இந்த விடுதலைப் போராட்டத்தோடு, புலிகளின் குரல் வானொலி நிறுவனம் தேசியத்தின் விடுதலைக்காக பெரும் பணியாகவும், இலக்காகவும் கொண்டு தனது சேவையை ஆற்றி இருக்கிறது. எமது தேசியத் தலைவர் எந்த சிந்தனையோடு, இந்த நிறுவனத்தை உருவாக்கினாரோ, அவருடைய சிந்தனையை மக்களுக்கு எடுத்துக்காட்டும் ஒரு பெரும் நிறுவனமாக இந்த புலிகளின் குரல் நிறுவனம் பங்காற்றி வருகிறது.

இந்த நிறுவனம் தனது பணியை விடுதலைப் போராட்டத்தோடு இணைந்து செயற்படுத்திக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம் பல்வேறுபட்ட இடப்பெயர்வுகளையும், அதன் மூலம் சந்தித்த பெரும் கஷ்டங்களையும், துன்பங்களையும் தாங்கிக் கொண்டும் இன்று தனது பதினான்கு ஆண்டு சேவையை நிறைவு செய்திருக்கிறது.

அந்த வகையிலே இந்த நிறுவனத்தினுடைய பொறுப்பாளர்கள், போராளிகள் இந்த நிறுவனத்தை வளர்க்க வேண்டும் என, இரவு பகல பாராது உழைத்துக் கொண்டு இருக்கின்ற பணியாளர்கள் அனைவருக்கும் தமிழீழ தேசியத் தலைவரின் சார்பிலும், போராளிகளின் சார்பிலும் புலிகளின் குரல் நிறுவனத்துக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல கஷ்டங்களின் மத்தியில் இடைவிடாது எங்கள் தேசியத் தலைவரின் சிந்தனையை, விடுதலைப் போராட்டத்தின் வடிவத்தை, தனது பணியை ஆரம்பித்து இன்று வன்னி மண்ணிலே, விடுதலைப் போராட்ட வரலாற்றிலே, வரலாற்று உண்மைகளை பிரகாசித்துக் கொண்டு இருக்கும் ஒரு பெரும் நிறுவனமான இந்த புலிகளின் குரல் நிறுவனம் தனது பணியை செயற்படுத்தி வருகிறது.

காலத்துக்கு காலம் பெரும் யுத்தத்தில் ஏற்பட்ட இடம்பெயர்வுகளில் கூட, மக்களோடு மக்களாக இந்த நிறுவனமும், நிறுவனத்தின் பணியாளர்களும் இரவு பகல் பாராது, தாமும் இடம்பெயர்ந்து வந்து இதனுடைய பணியை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிறுவனம் விடுதலைப் போராட்டத்துக்கான பணியை மிகவும் உன்னிப்பாக, தொடர்ச்சியாக தனது பணியை நிறைவேற்றி வந்துள்ளது. அடக்கப்பட்ட எமது மக்களின் குரலாக ஒலித்து கொண்டு இருக்கிறது இந்த நிறுவனம். எமது தாயகத்திலும், வெளியுலகிலும் ஒலிக்கவேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் நீண்ட நோக்கத்தின் வெளிப்பாடாக தனது உழைப்புக்களை இன்று வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

காலத்துக்குக் காலம் பெரும் யுதத சூழலில் முகம் கொடுத்து எமது மக்களுக்கு இந்த விடுதலைப் போராட்டத்தின் உண்மைகளை, நேரத்துக்கு நேரம் ஒலித்துக் கொண்டு, மக்களின் குரலாக இந்த புலிகளின் குரல் தனது பணியை செயற்படுத்தியது. யுத்த காலத்திலும், யுத்த நிறுத்தம் செய்யப்பட்டு சமாதான காலத்திலும் புலிகளின் குரல் தனது வளர்ச்சியையும், தமிழீழ தேசியத் தலைவர் எதிர்பார்க்கின்ற எதிர்பார்ப்பாகவும் தனது பணியை செயற்படுத்தி வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புலிகளின் குரல் 14 ஆம் ஆண்டு நிறைவு விழா அமலன் அரங்கில் புலிகளின் குரல் துணைப்பொறுப்பாளர் வி.செயல் வீரன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார்.

ஈகச் சுடரைப் போராளி தமிழ்க்கவி ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து ஜெ.பிரின்சியாவின் மாவீரர் வணக்க நடனம் இடம்பெற்றது. அடுத்துப் புலிகளின் குரல் பிரதம செய்தி ஆசிரியர் தி.தவபாலன் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றதையடுத்து அனைத்துலக செயலகத்தைச் சேர்ந்த போராளி அன்பரசு நிகழ்த்தினார். சிறப்புரையைத் தமிழீழ அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார். இதனையடுத்துப் புலிகளின் குரலுக்குத் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனால் அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.

வானோசை 14 கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு, தமிழீழத் தேசியத் தலைவர் கையெழுத்திட்ட சான்றிதழ்களையும், பரிசில்களையும் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் புலிகளின் குரல் படைப்பாளர் பொன்.காந்தன், இ.இராஜேஸ்வரன், ஆதிலட்சுமி சிவகுமார், செந்திரு, திருநகடூர் ஜெகா, மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள், தளபதிகள், போராளிகள், புலிகளின் குரல் படைப்பாளர்கள், நேயர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இறுதி நிகழ்வாக நன்றியுரையைப் புலிகளின் குரல் நிகழ்ச்சி இணைப்பாளர் க.சுபாஜினி நிகழ்த்தினார்.







**நேற்றுமுன்தினம் அமலன் அரங்கில் நடைபெற்ற புலிகளின் குரல் வானொலியின் 14 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் பரிசில்களை வழங்குவதை முதலாவது படத்திலும், கலந்துகொண்ட பிரமுகர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.**



**கிளிநொச்சி - இரணைமடு நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்பியத்தை அடுத்து நீர்த் தேக்க அணையை பாதுகாக்கும் நோக்கில் அதன் 11 வான் கதவுகளில் 10 வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுகின்றதை படத்தில் காணலாம்.**

## அடிப்படை வசதியின்றி மூன்றாம்பிட்டி கிராமம்

மன்னார் மூன்றாம்பிட்டிக் கிராம மக்கள் - அடிப்படை வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் கல்வி, மருத்துவம், பொருளாதாரம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கிராமத்தில் 215 குடும்பங்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பசுப் பாலுக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி நகரில் பசுப்பால் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நகர்ப்பகுதியில் கால்நடை வளர்ப்போர் சங்கத்தால் பசுப்பால் விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது இது இடைநிறுத்தப்பட்டுள்ளதால், இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.




## நான்கு பேர் டெங்கு காய்ச்சலால் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக, வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி கு.சந்திரகுமார் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் பரவிவரும் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் வகையில், தீவிர விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருவதாக வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

## மன்னாரில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 1300 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன

மன்னார் மாவட்டத்தில் கடந்த நாட்களில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால், இடம்பெயர்ந்து 1300 குடும்பங்கள் பொது இடங்களான பாடசாலைகள், தேவாலயங்கள் என்பவற்றில் தங்கியுள்ளதாக மன்னார் அரச செயலகத்தின் புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

இந்த மாவட்டத்தின் பல இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இதைவிட மன்னார் பொது மைதானத்தில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை அகற்றும் பணி இடம்பெற்று வருகிறது. இவ்வாறு வெள்ளம் தேங்கி நிற்பதற்கு வடிகால், வாய்கால்களை உரியமுறையில் பேணப்படாமையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார்–பெரியமடுப் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

மன்னார் - பெரியமடுப் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு மன்னார் பெரியமடு மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி மாவீரர் லெப்டினன்ட் கேணல் ராஜனின் தந்தையார் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை பெரியமடுப் பிரதேசப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

## முன்பள்ளி ஆசிரியருக்கான வதிவிடப் பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து, மாகாண சிறுவர் செயற்திட்டத்தின் கீழ், கல்வி அமைச்சின் ஒருங்மைப்பில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி- கடந்த வெள்ளிக்கிழமை தமிழர் புனர்வாழ்வுக் கழக, கிளிநொச்சி மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறி முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவரும், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளருமான சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் .முன்பள்ளி செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகளை, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இ.ராஜன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தப் பயிற்சியின் வளவாளராக தமிழ்மொழி பாடசேவைக்கால ஆலோசகர் மலர்நாயகி கலந்து கொண்டார்.

இந்தப் பயிற்சிநெறி மூன்று அமர்வுகளாக நடைபெற்றது. இதில் 25 ஆசிரியர்கள் பயிற்சியாளர்களாகக் கலந்து கொண்டனர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com


**சிந்தனைக்கு**

*அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி இடத்தாற் செயின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சிறுமை கண்டு பொங்கும் மக்கள்

கடந்த வெள்ளியன்று வல்வெட்டித்துறையில் இரு அப்பாவி இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட கொடூர நிகழ்வையடுத்து – நேற்றுமுன்தினம் குடாநாட்டில் நிலவிய அசாதாரணமான சூழ்நிலையானது நேற்று ஓரளவுக்கு தணிந்திருந்தபோதிலும் அதன் தாக்கம் முற்றாக மாறிவிட்டது என்று கூறமுடியாது. நீறுபூத்த நெருப்பாக பொதுமக்கள் மனதில் கனன்று கொண் டிருக்கும் வெஞ்சின உணர்வினை மிகவும் சாதாரணமான சூழல் மாற்றங்கள் தணித்துவிடும் என்று எதிர்பார்க்கவேமுடியாது.

வல்வையில் கொல்லப்பட்ட இரு இளைஞர்களும், மீசாலையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவரும் அப்பாவிப் பொதுமக்களே. அவர்களுக்கு அரசியல் ரீதியிலோ, தனிப்பட்ட முறையிலோ எதிரிகள் எவரும் இல்லை.

எனினும், ஆயுதபாணிகளாக வந்து கொலைகளை புரிந்தோரின் நோக்கமும், சூடுநடத்திய இராணுவத்தினரின் நோக்கமும் அப்பாவிகளை இலக்கு வைத்ததாகவே அமைந்துள்ளது. நிராயுதபாணிகளே இவர்களின் இலக்குகளாக அமைந்துள்ளதைப் பார்க்கையில் – திட்டமிட்டு வன்முறைகளையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி மக்களிடையே பீதியையும், வீணான சந்தேகங்களையும் ஏற்படுத்துவதே அவர்களின் பிரதான நோக்கம் என்பதை உணரக் கூடியதாகவும் உள்ளது.

மக்களும் இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நேற்றுமுன்தினம் அவர்களே முன்னின்று நடாத்திய ஹர்த்தாலும், அதனையொட்டிய எதிர்ப்பு மற்றும் கண்டன நடவடிக்கைகள் உறுதிசெய்துள்ளன.

இப்படியான மனிதநேயமற்றதும், அமைதியைக் குழப்பி ஆதாயம் தேடும் உள்நோக்கம் கொண்டதும், ஆயுதமுனையிலானதுமான தமிழின எதிர்ப்பு நடவடிக்கைகளை – இராணுவத் தரப்பினரும், அவர்களுக்குப் பின்னால் நின்று இயங்கும் கைக்கூலி அமைப்புக்களும் கடந்த காலங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொண்டதை எவரும் மறந்துவிடமாட்டார்கள்.

இன்றைய சமாதான சூழலை எப்படியாவது குழப்புவதற்குத் தருணம் பார்த்திருக்கும் சக்திகள் – அதாவது பேரினவாத சக்திகளும், அவர்களின் ஆதரவாளர்களும் – தற்போதைய நிலையில் சர்வதேச ரீதியில் தமிழர் தரப்பின் – குறிப்பாக விடுதலைப் புலிகளின் நியாயபூர்வமான கருத்துக்கள் மிகுந்த அக்கறையுடன் அவதானிக்கப்பட்டுவருவதை பொறுக்காதவர்களாக இருப்பதும் தெரிந்தவிடயமே.

அவர்கள் ஏதாவதொரு மூலோபாயத்தினடிப்படையில் – விடுதலைப்புலிகளுக்கு சினத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைப் போர்க்கோலம் கொள்ளவைக்கும் உத்திகளைக் கையாளும் முனைப்புடன் பல்வேறு நடவடிக்கைகளை வடக்கிலும் – கிழக்கிலும் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை கடந்த ஐந்து மாதங்களாக நிகழ்த்தப்பட்டுவரும் பல்வேறு வகையிலான தாக்குதல் நடவடிக்கைகள் உறுதி செய்துள்ளன.

அறிவு ஜீவிகள்முதல் அப்பாவிப் பொதுமக்கள்வரை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலரை இராணுவ புலனாய்வுத்துறையின் பின்புல ஆதரவுடன் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்படுவது குறித்து அன்றாடம் ஊடகங்கள் சுமந்துவரும் செய்திகள் பலவாகும்.

இவை சம்பந்தப்பட்டோரால் மறுக்கப்பட்டாலும்கூட, மக்கள் இவற்றின் பாதிப்புகளை சுலபமாக மறந்துவிடத் தயாரில்லை என்பதே உண்மை.

வல்வைச் சம்பவத்தின்போது கூட்டத்தில் ஒருவராக நின்று காயப்பட்ட ஒருவரை மருத்துவமனைக்குள் விதிமுறைகளை மீறி உட்புகுந்து அவருக்கு இராணுவசீருடை அணிவித்து அவரை கடத்திக்கொண்டு – பலாலி இராணுவ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு சென்றுள்ள படையினரின் செயலும், அவரிடமிருந்து பெற்ற வாக்கு மூலத்தை வைத்துப் பொய்யான குற்றச்சாட்டை ஈ.பி.டி.பியினர் மூலம் விடுதலைப்புலிகள்மீது சுமத்த அரச ஊடகங்கள் அவசரம் காட்டியதையும் பார்க்கும்போது எல்லா உண்மைகளும் வெட்ட வெளிச்சமாகத் தெரியவே செய்கின்றன.

இந்தக் கொலைச் சம்பவத்தை படையினரின் உதவியுடன் ஈ.பி.டி.பியினரே மேற்கொண்டதாக வல்வை மக்கள் ஒன்றியம் அறிக்கையொன்றையும் விடுத்துள்ளது.

இது அரச ஊடகங்களின் உண்மைக்குப் புறம்பான உளறல்களை மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதையே உறுதி செய்வதாக உள்ளது.

பொய்ப்பிரசாரங்கள் ஏற்படுத்திய ஆத்திரமே மக்களை அதிகளவு சினம் கொள்ளவைத்தது என்றே கூறவேண்டும்.

இதன் எதிரொலியே புத்தூர்ச் சந்தி படைமுகாம் மீதான மக்களின் தாக்குதல் எனலாம்.

மக்களின் இந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக இப்படி எழுதவில்லை. அது எமது நோக்கமுமில்லை. ஆனால், மக்கள் சிறுமை கண்டு பொங்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்களின் நியாயமான கோபங்கள் எல்லை மீறுமளவிற்கு படைத்தரப்பு நடவடிக்கைகளால் தூண்டப்படும்போது அதன் விளைவுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றே கூறிவைக்க வேண்டியுள்ளது.

## நாடும் நடப்பும்




### தமிழக அரசு அனுமதித்தால்

# கொழும்புக்கு உடனேயே பயணிகள் கப்பல் சேவை

### இந்திய மத்திய அமைச்சர் ரி.ஆர்.பாலு

(சென்னை)

தமிழக அரசு அனுமதித்தால் தூத்துக்குடியிலிருந்து - கொழும்புக்கு பயணிகள் கப்பல் சேவை உடனே நடத்தப்படும என்று, இந்திய மத்திய கப்பல்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

தூத்துக்குடியில் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற சேது சமுத்திரத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கான விழிப் புணர்வுக் கருத்தரங்கில் பங்கேற்றவர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் விளக்கம் அளித்தார்.

கொழும்புக்குப் பயணிகள் கப்பல்சேவை நடத்துவது குறித்து, திருநெல்வேலி தொகுதி முன்னாள் எம்.எல்.ஏயான ஏ.எல். சுப்பிரமணியன் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்து அமைச்சர் பாலு பேசியதாவது -

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து, கொழும்புக்குத் தற்போது அதிகமான சரக்குக் கப்பல்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால், பயணிகள் கப்பல் போக்குவரத்தை மாநில அரசு வேண்டாம் என்று கூறுகிறது. இதற்குப் பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளது.

மத்திய, மாநில அரசுகளிடம் இணக்கமான போக்கு இருக்க வேண்டும் என்பதால், மாநில அரசின் ஒப்புதலைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாநில அரசு அனுமதித்தால் பயணிகள் கப்பல் உடனே இயக்கப்படும் என்றார் அமைச்சர்.

இலங்கையிலிருந்து, தமிழகத்துக்கு மன்னார் வளைகுடா வழியாகப் பாலம் அமைக்கவேண்டும் என்று, இலங்கை அரசு கேட்டுள்ளது. இதனால், சேது சமுத்திரத் திட்டத்தை நிறுத்த சதி நடைபெறுகிறதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கும் அமைச்சர் பதில் கூறினார்.

அவ்வாறு ஒரு திட்டம் குறித்து எங்கள் அமைச்சகத்துக்குத் தகவல் எதுவும் வரவில்லை.

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறியதும், கப்பல் மாலுமிகளை உருவாக்கும் பல்கலைக்கழகம் தமிழகத்தில் அமைக்கப்படும் என்று அமைச்சர் பதிலளித்தார்.

# நீதிபதி கொலையுடன் விடுதலைப் புலிகளை தொடர்புபடுத்துவது முட்டாள் தனமானது

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை, திட்டமிட்ட நடவடிக்கை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மகாநாட்டில் சட்டத்தரணிகள் கருத்துத் தெரிவிக்கையில் ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக நீதிபதியின் வீட்டுத் தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்பு பாதுகாப்பும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் இதே பாணியில் தான் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பதற்குரிய வாய்ப்புகள் முற்றாக இல்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை விதித்த இதே நீதிபதி தான், பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தாக்குதல் வழக்கில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட, 4 பேருக்கு மரண தண்டனை விதித்தார். இந்தச் சம்பவத்துடன் புலிகளைத் தொடர்பு படுத்துவது முட்டாள் தனமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

# தெற்காசியா தொடர்பான அமெரிக்க கொள்கை மாறாது!

### இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)

தெற்காசிய வலயம் தொடர்பாக அமெரிக்காவின் கொள்கைகள் முன்பு போலவே எந்தவித மாற்றமுமின்றி நடைமுறைப்படுத்தப் படுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லவ்ஸ்ரீட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலராகவிருந்து பதவி விலகிய றிச்சட் ஆர்மிரேஜின் இடத்துக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

இலங்கை விவகாரங்கள் தொடர்பாக ஆர்மிரேஜ், தனிப்பட்ட ரீதியாகவும் அதிகளவு அர்ப்பணிப்புக்களுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். இது மிகவும் சிறந்த ஒன்றாகும். அவர் தற்போது தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அவரது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் அவருடன் மட்டுப்படுத்தப்பட்டவை.

அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் பதவிக்குப் புதிதாக யார் நியமிக்கப்படுவார் என்பது எமக்குத் தெரியாது. புதிதாக நியமிக்கப்படுபவரின் விருப்பு, வெறுப்புகளும் என்ன என்பது எமக்குத் தெரியாது.

ஆனாலும், இலங்கை தொடர்பாக அமெரிக்காவின் நிலைப்பாடு யாதெனில், இலங்கையில் சமாதானமும், சுபீட்சமும் ஏற்படுவதைக் காண்பதாகும். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக இலங்கையின் ஒத்துழைப்புத் தொடர்ந்தும் எமக்குத் தேவையெனவும் அவர் தெரிவித்தார்.

### வேலை நேரம் 9 மணி நேரமாக அதிகரிப்பு

# ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் சேவை நேரத்தை ஒன்பது மணித்தியாலங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

தேசிய ஊழியர் சங்கத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே மேற்கண்ட வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஊழியர்களின் சேவைநேர நீடிப்பு என்ற இந்தப் புதிய முறை நடைமுறைப்படுத்தப்படுமாயின், அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நடவடிக்கைக்கு எமது எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன், அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வோம். இந்த விடயம் அடங்கலாக வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து, எமது சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடி வருகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவீரர் நாள் - 2004

# வரலாற்றில் தனிச்சிறப்புப்பெறும் மாவீரர் நாள்

1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாளை, முதலாவது தமிழீழ மாவீரர் நாளாகத் தமிழீழம் உணர்வார்ந்த நிலையில் கடைப்பிடித்தது. அன்றிலிருந்து தமிழீழத்தின் மிகப்பெரிய நிகழ்வாக, எழுச்சியாக, புனிதமாக, உணர்வார்ந்த நிகழ்வாக தமிழீழ மாவீரர் நாள் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஏனைய நாடுகளில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுவதற்கும், தமிழீழ மாவீரர் நாளை கடைப்பிடிப்பதற்கும் பெரும் வேறுபாடுகள் உண்டு. ஏனைய நாடுகளில் எல்லாம் விடுதலைக்குப்பின் அமைந்த அரசுகளால் விழாக்கள் எடுக்கப்படுகின்றனவே தவிர, போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலங்களில் விழாக்கள் எடுக்கப்படுவதில்லை. ஆனால், விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையிலும், எதிரியின் அச்சுறுத்தல்கள், தாக்குதல்களுக்கிடையிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையில் போராட்டத்தையும் நடத்திக் கொண்டு, தமிழீழ மக்கள் மண்ணின் விடிவிற்காகத் தம் இன்னுயிர்களை ஈர்ந்த மாவீரர்களை எழுச்சியோடு நினைவுகூர்ந்துவருகின்றனர். மாவீரர்களின் பெற்றோர்களை, குடும்பத்தினரைப் போற்றிச் சிறப்பிக்கின்றனர்.

வீரச்சாவடையும் தமிழீழ மாவீரர்களது வித்துடல்கள் - மாவீரர் துயிலுமில்லங்களில் கல்லறைகளில் விதைக்கப்பட்டும், நடுகற்கள் நாட்டப்பட்டும் வழிபாடியற்றப்படுகிறது. மாவீரர் நாளில் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர் மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்பட்டு- அன்று தமிழீழ மக்களால் போற்றி மதிப்பளிக்கப்படுகின்றனர். உலகில் எங்குமே தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுபோல, மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் - அவர்களின் பெற்றோரும், குடும்பத்தினரும் போற்றப்பட்டு மதிப்பளிக்கப்படும் நிகழ்வுகள் நடைபெற்றதாகவோ, நடைபெறுவதாகவோ வரலாறில்லை.

*மாவீரர் எழுச்சி நாட்களின் நிகழ்வுகளும், நடைமுறை ஒழுங்குகளும்*

1989 ஆம் ஆண்டில் நவம்பர் 27 ஆம் நாளை மாவீரர் நாளாகவும், 1990 ஆம் ஆண்டிலிருந்து 1994 ஆம் ஆண்டுவரை நவம்பர் 21 ஆம் நாளிலிருந்து 27 ஆம் நாள்வரை மாவீரர் எழலாகவும் (வாரமாகவும்) தமிழீழ மக்களால் எழுச்சி நிகழ்வாக நடைபெற்றுவந்த தமிழீழ மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் 1995 ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் மாதம் 25 ஆம் நாள்முதல் 27 ஆம் நாள்வரை மூன்று நாட்களில் எழுச்சிநாட்களாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

**- தமிழீழ மாவீரர் பணிமனை -**

# தமிழரின் உரிமைப் போராட்டம் விடுதலைப் போராட்டமாகப் பரிணமித்தது

*(நேற்றைய தொடர்ச்சி)*

தியாகி சிவகுமாரனுடைய பங்களிப்பும், அர்ப்பணிப்பும் தமிழர் அரசியலில் பல தாக்கங்களை உருவாக்கியது. தமிழர் போராட்டம் - உரிமைப் போராட்டம் என்ற நிலையிலிருந்து விடுதலைப் போராட்டமாக அது பரிணமிக்கலாயிற்று. விடுதலைப் போராட்டத்தை சாத்வீக வழியிலன்றி ஒருங்கமைக்கப்பட்ட ஒரு ஆயுதப் போராட்டமாக மாற்றியமைக்கவும் அது காரணமாயிற்று. இதனால்தான் தமிழர் போராட்ட வரலாற்றில் சிவகுமாரனுடைய தியாகம் ஒரு திருப்புமுனை என்று வர்ணிக்கப்படுகிறது.

1974 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5 ஆம் திகதி அவரது மரணம் நிகழ்ந்தது. அது பல இளைஞர்கள் உள்ளத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்புக்களை ஏற்படுத்தியது. அவரது போராட்ட அணுகுமுறைகளை ஏற்றுக்கொள்ளாத பகுதிநேர அரசியல்வாதிகள் சிலர் - அவரது கல்லறை மீதுநின்று தமது நாடாளுமன்ற அரசியலுக்குப் பாதைபோட முயற்சித்தனர். ஆனால், அத்தகைய அரசியல் அதிக நாட்கள் நீடிக்கவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் அவர் மரணித்த ஓராண்டுக்குள் அதாவது 1975 மே மாதம் 5 ஆம் திகதி புதிய பரிணாமம் பெற்று ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட நிலையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு கரந்தடிப்படையாயிற்று.

ஆரம்ப காலத்தில் விடுதலை ஸ்தாபனத்துக்கு ஏற்படக்கூடிய பொருளாதாரக் கஷ்டங்களைத் தவிர்க்கும் முகமாக அரச வங்கிகளில் இருந்து பணத்தைப் பெறும் முயற்சிகள் இடம்பெற்றன. இவை தொடர்பான புலன் விசாரணைகளை மேற்கொண்ட இரகசியப் பொலிஸாரின் வலைப்பின்னல்களை அறுத்தெறியும் முகமாக அவர்கள் மீது இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இதேவேளை பொதுமக்களை இம்சைப்படுத்திய பொலிஸ் குழுக்களின் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மறைந்த முதல் மாவீரன் லெப்.சங்கர் தலைமையில் இடம்பெற்ற தாக்குதல் இவ்வாறான தேயாகும். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முதலில் களப்பலியான லெப்.சங்கரின் மரணம் போராளிகளுக்குப் போராட வேண்டுமென்ற உத்வேகத்தை மேலும் ஊட்டியது.

சங்கரின் வீரமரணத்தின் பின் பல தாக்குதல்களுக்கு, திருகோணமலையைச் சேர்ந்த சீலன் (சாள்ஸ் அன்ரனி) தலைமை ஏற்றார். எதிர்பாராத விதமாக 15-07-1983 அன்று மீசாலையில் எதிரியுடனான மோதல் ஒன்றில் லெப்.சீலனும், வீரவேங்கை ஆனந்தும் (அருள்நாதன்-மயிலிட்டி) படுகாயமடைந்த நிலையில் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்ற இயக்க மரபைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய நிலைமை இரு போராளிகளுக்கும் ஏற்பட்டது. இந்த நிலையில் தன்னுடன் கூட நின்ற போராளியிடம் தங்களை சுட்டுவிடும்படியும், ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தப்பித்துவிடும்படியும் இரு போராளிகளும் கூறினார்கள்.

அந்தப் போராளிக்கோ ஒரு சில கணங்கள் மிகவும் தர்மசங்கடமான நிலை, அந்தப் போராளி சீலனிடம் ஆயுதப்பயிற்சி பெற்றவன். அதை விட சீலனை உயிருக்குயிராக நேசித்தவன். அத்தோடு அவன் அங்கம் வகித்த தாக்குதல் பிரிவுக்கு சீலனே தலைமை தாங்குபவன்.

அந்தப் போராளி தன்னை சுதாகரித்துக்கொண்டு, இயக்கத்தின் நலனை முதன்மைப்படுத்தி இயக்கத்தின் இராணுவ இரகசியங்களைக் காப்பாற்றுமுகமாகவும், சீலனின் கட்டளையை ஏற்று ஒருசில வினாடிக்குள் அவரது கட்டளையை நிறைவேற்றிவிட்டுத் தனது கையில் பட்ட காயத்திலிருந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்த நிலையிலும், மிகவும் நிதானமாக அங்கிருந்து தப்பித்து பிறிதொரு இடத்தை நோக்கிச் சென்று தலைமறைவானான்.

இந்த நிகழ்வு - தமிழ்ப் போராட்ட வரலாற்றில் புதிய பரிணாமத்தை வெளிப்படுத்தியது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால படிநிலை வளர்ச்சியின் சம்பவமான இந்தநிகழ்வு, விடுதலைப் போராட்டத்தின் உறுதிப்பாட்டைத் துலாம் பரப்படுத்தியது. அத்தோடு அதன் எதிர்கால வளர்ச்சிக்கும் நம்பிக்கையோடு கட்டியம் கூறியது.

**- அருண்பிரசாத்**

## தெற்கு திசையினிலே

**இந்திரஜித்**

# சமாதான முன்னெடுப்புகளின் அடுத்த கட்டத்திற்கு அரசாங்கத்திடம் தெளிவான கொள்கையேதுமில்லை







இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளின் அடுத்த கட்டத்தை எவ்வாறு ஆரம்பிப்பது குறித்து அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை என்பது முன்பிருந்தே தெரிந்த விடயமாக இருந்த போதும், தற்சமயம் அது வெளிச்சத்துக்கு வந்துகொண்டிருக்கிறது.

காலம்காலமாக சிங்கள அரசாங்கங்கள் தமிழர்களின் பிரச்சினையை அணுகிவந்த முறையில் இருந்து தற்போதைய தலைமைகள் மாறியுள்ளதாக எடுத்துக் கொள்ளமுடியவில்லை. அந்த சிங்கள பரம்பரை அரசியல் தொடர்ந்துகொண்டிருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஐக்கிய தேசிய கட்சியும் - ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் தமிழர் தொடர்பான இனப்பிரச்சினை தீர்வில் தமது இனத்துவத்தை பேண முயற்சித்து வந்தமை காரணமாகவே அந்தப் பிரச்சினை பூதாகரமாக வெடித்தது. இன்று ஏற்கனவே பிரிந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாணக் கட்டமைப்புக்கு அங்கீகாரம் கொடுப்பதில்கூட சிங்கள அரசாங்கங்கள் பின்னிற்பது இதனை மையப்படுத்தவேயாகும்.

இனத்துவக் கொள்கையை மையப்படுத்தினால் மாத்திரமே இலங்கையில் ஆட்சி அமைக்க முடியும் என சிங்கள அரசாங்கங்கள் எண்ணிவந்த காரணத்தாலேயே இன்று அந்த சிங்கள இனத்திற்கே பாதகமான நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதல், இன்றுவரை அவர் சமாதான முன்னெடுப்பில் - தீர்வில் காத்திரமான பங்கை வகிக்க முடியும் என தமிழ் மக்கள் உட்பட அனைத்து இன மக்களும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அவர் அன்றுமுதலே மேற்கொண்டுவந்த அரசியல் மயப்படுத்தப்பட்ட திட்டங்கள் காரணமாக அவர் கூறும் எந்த ஒரு சொல்லையும் சந்தேகத்துடனேயே பார்க்கவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சமாதான நகர்வில் விட்ட இடத்தில் இருந்து பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கவேண்டும் என்பது தமிழிழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. தென்னிலங்கையில் திரிபுபட்டு, தற்சமயம் தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி என்ற நிபந்தனையை விதிப்பதாக அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டில் சமாதான பேச்சுவார்த்தை நகர்வு இடைநிறுத்தப்பட்டபோது, இலங்கையின் அரசாங்கமாக செயற்பட்ட ஐக்கிய தேசிய கட்சி - தாம் சமர்பித்த இடைக்கால நிர்வாக யோசனைக்காக, தமிழிழ விடுதலைப்புலிகளிடம் இருந்து மாற்று யோசனைகளைப் பெற்றிருந்தது. அதுவே இடைக்கால தன்னாட்சி அதிகார சபையாக கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில் தென்னிலங்கையில் இன்று சிங்கள மக்களை திசைதிருப்பும் நடவடிக்கைக்காக இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அரசியல் கட்சிகள் தமது பிரசாரமாக எடுத்துக்கொண்டுள்ளன. இந்தவேளையில் அண்மைக் காலத்தில் ஜனாதிபதி கூறிய கருத்து ஒன்றை நினைவூட்டுவது பொருத்தமானதாக இருக்கும். ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க பதவியேற்று 10 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு இடம் பெற்ற நேர்காணல் ஒன்றில் - இந்த கருத்தை ஜனாதிபதி வெளியிட்டிருந்தார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சி இன்னும் ஒரு வருடகாலத்துக்கு மாத்திரமே இருக்கிறது. அவர் ஜனாதிபதியாக ஒரு வருட காலத்துக்கு மாத்திரமே பதவி வகிக்கமுடியும் எனவே, அவருடன் பேச்சுவார்தையை நடத்தி தீர்வு ஒன்றை எட்ட முடியாது என தெரிவித்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி - இலங்கை அரசாங்கம் எந்தக்கட்சியை மையப்படுத்தி இருந்தாலும், எவரை மையப்படுத்தி இருந்தாலும், காலம் என்ற நிர்ணயத்துக்கு அப்பால் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என வலியுறுத்தினார்.

தேசியப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் ஒன்றின் பதவிக்காலத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டிப் பேச்சுவார்த்தையை காலம் தாமதிப்பதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தினார். ஜனாதிபதியின் இந்த கொள்கைளை நாம் அவரின் பக்கமே கொண்டுசென்று பார்ப்போமாக இருந்தால், அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி தொடர்பாக மாற்று யோசனை ஒன்றை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் சார்பில் தயாரித்தமை பொருத்தமற்றதாகவே அமைந்துள்ளது.

இலங்கையின் அரசாங்கம் என்பது கட்சிகளை மையப்படுத்தவில்லை என ஜனாதிபதி கூறுவாறாக இருந்தால், ஐக்கிய தேசிய கட்சி காலத்தில் இலங்கையின் அரசாங்கம் என்ற அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்காலத் தன்னாட்சி யோசனையைச் சமர்பித்தனர்.

அதனை ஜனாதிப்தி ஏற்றுக் கொள்ளாமல் தமது கடசியின் சார்பில் அரசாங்கத்தின் மாற்று யோசனை ஒன்றை சமர்ப்பித்தமை எந்தளவு பொருந்தும், அதிலும் ரணில் விக்கிரமசிங்க, இல்ங்கையில் இருக்கக்கூடிய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைச் சவாலாக ஏற்றுச்செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள ஜனாதிபதி இணங்கியமை இங்கு முரண்பட்ட எண்ணங்களை வெளிப்படுத்தியல்லவா நிற்கிறது?

போர் ஒன்று நாட்டில் ஏற்படக் கூடாது அது தமது ஆட்சிக்குப் பாதகமாக அமைந்துவிடும் என்பதற்காகப் போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, தமிழீழ விடுதலைப் புலிகள் போர் ஒன்றுக்குச் செல்லமாட்டார்கள் என்ற துணிச்சலின் அடிப்படையில், தமது அரசியல் காரணத்தை மையப்படுத்தி சமாதான பேச்சுவார்த்தையை அவர் இழுத்தடிக்கிறார் எனறே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

அதாவது தமது அரசாங்கத்துக்குள் இருக்கின்ற சமாதான முயற்சிகள் தொடர்பான முரண்பாடுகளை இந்தவகையில் அவர் மூடி மறைத்துக்கொண்டிருகிறார் என்றே கருத வேண்டியுள்ளது. அதேநேரம் தமது அரசாங்கத்துக்குள் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கும் விடயத்தில் முரண்பாடுகள் இல்லை என அவர் தெரிவித்தமை மூடிமறைக்கப்பட்ட பொய்யாகும்.

இதற்காக அவர் கூறிய காரணத்தை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். ஜே.வி பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச லண்டனில் வெளியிட்ட ஜனாதிபதிக்கு விருப்பமானால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்ற கருத்தை, ஜனாதிபதி ஜே வி.பி அந்த விடயத்தில் தடையாக இல்லை என்ற தோரணையில் காட்டவே முயற்சித்துள்ளார் என்பதை சுட்டிநிற்கிறது. விமல் வீரவன்ச கூறிய கருத்து - ஜனாதிபதி முடிந்தால் செய்து பார்க்கட்டும் என்ற தொனியில்தான் என்பது இலங்கையில் உள்ள அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஏனெனில் கார்த்திகை வீரர்கள் தினத்தில் ஜே.வி.பி தாம் தனியான அரசாங்கத்தை அமைக்கப் போகிறோம் எனக் கூறியதிலிருந்து அவர்கள் ஜனாதிபதியின் கட்சியுடன் முரண்பட்டு தனியாக செல்வதை எதிர்ப்பார்த்திருக்கிறார்கள் என்பதை ஜனாதிபதி தமது கருத்தின்மூலம் மறைக்க முற்பட்டமையும் அவரின் அரசியல் மாறுபாட்டு நகர்வையே காட்டுகிறது.

இதேவேளை எதிர்வரும் மாவீரர் தினத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சமாதானப் பேச்சுகள் தொடர்பாக முக்கிய செய்தியை வெளியிடுவார் என, அரசாங்கம் எதிர்பார்த்திருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஏனினும் இதனை முந்திக் கொண்டு தாம் சர்வதேசத்துக்கு முன்னால் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை எனக் காட்டுதற்காகவே இந்த மாதத்திற்குள் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என எச்சரிக்கை தொனியில் தெரிவித்த அவரின் அறிவிப்பை எடுத்துக்கொள்ளவேண்டியுள்ளது.

# சீனாவில் விமான விபத்து; பயணிகள் உட்பட 53 பேர் பலி



(பெய்ஜிங்)

சீனாவின் வடபகுதியில் பயணிகள் விமானமொன்று விழுந்து விபத்துக்குள்ளானதில் விமானத்தில் பயணம் செய்த 47 பயணிகள் உட்பட 53 பேர் கொல்லப்பட்டதாக சீன செய்தி நிறுவனமான சின்குவா தெரிவித்தது.

மொங்கோலியாவின் தொழிற்துறை நகரமான பாவோட்டா பகுதியிலுள்ள விமான நிலையத்திலிருந்து பயணிகளை ஏற்றிப் பறப்பினை மேற்கொண்ட இந்த விமானம் சிறிது நேரத்திலேயே விபத்துக்குள்ளாகி அருகிலுள்ள மிகப்பெரிய ஏரியொன்றில் விழுந்தது.

இவ்வாறு விழுந்த விமானத்தின் உடைந்த சில பாகங்கள் அருகிலிருந்த நான்காய் பூங்காவில் விழுந்ததில் அங்கிருந்த வீடுகள் பல தீப்பற்றி எரிந்தன. எனினும், இந்த வீடுகள் தீப்பற்றிக் கொண்டதில் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பான விபரங்கள் எதுவும் வெளிவரவில்லை.

இந்த விபத்து இடம்பெற்ற இடத்திற்கு தீயணைப்புப் படையினர் சென்று பூங்காவில் ஏற்பட்ட தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தீயணைப்பு படையினரில் ஒரு பகுதியினர் ஏரியில் விழுந்த விமானத்தின் சிதைவுகளிலிருந்து உயிரிழந்த 17 பேரின் உடல்களை மீட்டனர்.

இந்த விமானவிபத்து எவ்வாறு இடம்பெற்றது என்ற விபரம் தெரியவரவில்லை. இது குறித்து ஆராய விமான அதிகாரிகளின் கூட்டம் இடம்பெற்றது. இதன் போது விபத்துக்குள்ளான விமானத்தில் வெளிநாட்டுப் பயணி ஒருவர் பயணம் செய்தது தெரியவந்துள்ளது.

இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவர் இந்த விமான விபத்திற்குக் காரணமாக உள்ளாரா என்பது குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

விபத்துக்குள்ளான இந்த விமானம் சி.ஆர்.ஜே 200 என்ற ஜெட் விமானமெனவும், இதில் 50 பயணிகள் மட்டுமே பயணம் செய்யக்கூடியதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், இந்த விமானத்தில் 47 பயணிகள் 2 விமானிகள் 4 பணிப்பெண்கள் உட்பட 53 பேர் பயணம் செய்தமை குறிப்பிடத்தக்கது.




ஈராக்கில் மூன்று வாரங்களுக்கு முன்

# கடத்தப்பட்ட போலந்து பிரஜை விடுதலை செய்யப்பட்டார்!



ஈராக்கில் கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட போலந்துப் பெண் போசி கலிபா கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டார். இவர் தனது விடுதலையின் பின்னர் விமானம் மூலம் அன்றிரவே போலந்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் போலந்துப் பிரதமருடன் பத்திரிகையாளர்கள் முன் தோன்றிய போசி கலிபா இதுவொரு மகிழ்ச்சியான கணமெனத் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த மூன்று வாரங்களாக தான் தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளை மிகவும் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டதாகவும், தனக்குப் புதிதாக வர்ணம் பூசப்பட்ட சிறிய அறை ஒன்று தரப்பட்டடதாகவும் தெரிவித்த அவர் - கடத்தப்பட்ட நாளிலிருந்து கண்கள் கட்டப்பட்ட நிலையில் முஸ்லிம்களின் உடையையே அணிந்திருந்ததாகவும் தெரிவித்தார்.

ஆனாலும் இவர் விடுதலை செய்யப்பட்டது குறித்த தகவலை போலந்துப் பிரதமர் வெளியிட மறுத்துவிட்டார். இரண்டு காரணங்களுக்காக அவரது விடுதலை தொடர்பான தகவலை வெளியிட முடியாதென அவர் தெரிவித்தார்.

முதலாவது - எமது மக்களின் பாதுகாப்பு காரணம். ஏனெனில் போசி கலிபாவின் விடுதலை தொடர்பாக இரகசியம் எதனையும் தெரிவிக்க வேண்டாமென எனக்கு உதவியவர்கள் தெரிவித்தனர்.

இரண்டாவது - இவரது விடுதலைக்கு பல்வேறு அதிகாரிகள் பல்வேறு நாடுகளில் பல அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கலந்துரையாடியுள்ளனர். எனவே இந்தக் காரணங்களாலேயே அந்தத் தகவல்களை வெளியிட முடியாதெனத் தெரிவித்தார்.

விடுதலை செய்யப்பட்ட போசி கலிபா ஈராக்கியர் ஒருவரைத் திருமணம் செய்து கடந்த 30 வருட காலமாக ஈராக்கிலேயே வாழ்ந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக் தலைநகர் பாக்தாத்தைச் சூழ கிளர்ச்சிவாதிகள் தொடர் தாக்குதல்!

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமெரிக்க - ஈராக்கியக் கூட்டுப் படைகள் மீது ஈராக்கியத் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

பாக்தாத்தின் வடபிரதேசமான அட்கமியாவில் அமைந்திருந்த ஈராக்கியப் பொலிஸ் நிலையம் நேற்றையதினம் ஈராக்கியத் தீவிரவாதிகளின் பலத்த தாக்குதலுக்குள்ளாகியது.

தீவிரவாதிகள் றொக்கற்றுக்கள் மற்றும் கைக்குண்டுகளைப் பயன்



படுத்தி பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் மூன்று ஈராக்கியப் பொலிஸார் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

தீவிரவாதிகளின் தாக்குதலை முறியடிக்க அமெரிக்கப் படையினரின் தாங்கிகள் மற்றும் ஹெலிகொப்ரர்கள் அழைக்கப்பட்டு தீவிரவாதிகள் மீது பதில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும் மூன்று மணித்தியாலங்களாக அமெரிக்க - ஈராக்கியப் படைகளை எதிர்த்துப் போராடிய தீவிரவாதிகள், பொலிஸ் நிலையத்தினை தாக்கிச் சேதப்படுத்திய பின்னரே பின்வாங்கிச் சென்றனர். இந்தப் பொலிஸ் நிலையத்தின் பெரும்பாலான கட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் பாக்தாத்தின் தென் பகுதியில் வைத்து ஈராக்கிய உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் ஆலோசகரான பெண் உட்பட நால்வர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஈராக்கிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆலோசகரான அப்துல் ஹமித் அல் மாமல்ஜி, தனது மெய்ப்பாதுகாவலர் மற்றும் செயலாளர் ஆகியோருடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்த வேளையில் காரை வழிமறித்த தீவிரவாதிகள் கார்ச்சாரதி உட்பட காரில பயணம் செய்த மூவரையும் சுட்டுக் கொன்றனர்.

பாக்தாத்தின் வேறொரு பகுதியில் அமெரிக்கப் படையணி ஒன்றின் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு அமெரிக்கப் படைவீரர் கொல்லப்பட்டதுடன் 9 படையினர் காயமடைந்தனர்.

இதேவேளை, பாக்தாத்தில சுனி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் பள்ளிவாசல் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு ஈராக்கியப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பலூஜா நகர் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல்களை ஆரம்பித்ததையடுத்து பலூஜா நகரிலிருந்து பின்வாங்கிய ஈராக்கியத் தீவிரவாதிகளே பாக்தாத் நகரினுள் நுழைந்து அமெரிக்க மற்றும் ஈராக்கியப் படைகள் மீது தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்தது.

இதேசமயம், ஈராக்கின் மொசூல் நகரத்தில் ஈராக்கிய தேசிய காவற்படைவீரர்களின் எட்டு உடல்களை அமெரிக்கப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

# எதிர்கால அணுவாயுத திட்டங்களை வடகொரியா கைவிட வேண்டும்!

## அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிப்பு




வடகொரியா தனது எதிர்கால அணுவாயுதத் திட்டங்களைக் கைவிடவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

சிலியில் நடைபெறும் 21 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட ஆசிய- பசுபிக் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் சீனா, ஜப்பான் ரஷ்யா, அமெரிக்கா உட்பட 21 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் புஷ் தொடர்ந்து உரையாற்றுகையில் -

வடகொரிய அதிபர் கிம்மிற்கு நான் ஒரு தெளிவான செய்தியை தெரிவிக்கிறேன். இந்த நாடு கண்டிப்பாக அணுவாயுதத் திட்டங்களைக் கைவிடவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டுக்கு முன்னர் புஷ் கருத்துத் தெரிவிக்கையில்- ஈரான் கூட யுரேனிய பொருட்களை உற்பத்தி செய்கின்றது.

இவை அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுவனவாகும். இது தொடர்பாக நாம் அதிக அக்கறையாகவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மாநாடு நடைபெற்ற தலைநகர் சாண்டியாகோவிற்கு சென்ற வேளை சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் தெரிவித்தபோதும் - அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவர்கள் புஷ்ஷிற்கு எதிராகக் கோஷங்களை முழங்கினர். சிறிது நேரத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொலைபேசி வயர்களை அறுத்தும், வீதி விளக்குகளை அடித்து நொறுக்கியும் கலவரத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து இவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் தண்ணீரை பீச்சியடித்ததுடன், கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் வீசினர். இந்தச் சம்பவத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 189 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.


வீட்டிலிருந்து ஆங்கிலம் கற்று 90 நாட்களில் Diploma சான்றிதழைப் பெறலாம்



சரளமாக ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் தபால் மூலம் பயிற்சி அளிக்கப்படும். பாடநெறி முடிவில் Dip in English சான்றிதழும் வழங்கப்படும்.

மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகள்

- Excellent English Book [ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகம்]
- அழகிய Bag
- சுவர் கடிகாரம் (WallClock)

என்பன பரிசாக வழங்கப்படும்.

T.P மூலம் விபரங்களைப் பெற

0812-201433
0777-806603

நண்பர்களை அறிமுகம் செய்துவைத்து பரிசு பெறுங்கள்

தபால் மூல் ஆங்கில பாடநெறியைத் தொடர விரும்பும் உங்கள் நண்பர்கள் ஐவரின் பெயர், முகவரியை ஒரு Half Sheet தாளில் எழுதி, உங்கள் விபரத்தையும் எழுதி எமக்கனுப்புங்கள். விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு நிச்சயம் ஒரு பரிசு வழங்கப்படும்.

(C/3384)

10 cellular phone  500 Wall Clocks  25 Sarees 

J.E.I.INSTITUTE, P.O.BOX.119, KANDY.

ருது சாந்தி வைபவ நன்றி நவில்ல்

கோண்டாவில் கிழக்கு, நாகபூஷணி அம்மன் வீதியில் இடம்பெற்ற ருது சாந்தி வைபவத்தில் (15/11/2004) கலந்து சிறப்பித்து செல்வியை ஆசிர்வதித்த - உற்றார், உறவினர், நண்பர்கள், இந்துகுருமார்கள், நாகபூஷணி அம்மன் நிர்வாகசபையினர், காளிகோவில் நிர்வாகசபையினர், பேச்சியம்மன் அறங்காவலர், அற்புதநர்த்தன விநாயக சனசமூக நிலைய இளைஞர்கள், அனைவருக்கும், மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் வாழ்த்துரைகள் வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இந்த விழாவைச் சிறப்பிக்க உதவி நல்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வண்ணம்,
திரு.திருமதி.சிவஸ்ரீ புலேந்திரன் ஐயர் குடும்பத்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# ஆற்றில் பாய்ந்தது ஹை ஏஸ்
# அம்பாறையில் ஏழு பேர் பலி!

(கொழும்பு)

கண்டி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வரைப் பார்த்துவிட்டு ஹைஏஸ் வானில் திரும்பிக் கொண்டிருந்த வர்களின் வாகனம், வீதியிலுள்ள பாலமொன்றுடன் மோதி ஆற்றுக் குள் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த ஏழுபேர் உயிரிழந்ததுடன், இருவர் ஆபத்தான நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டத்தின் மகா ஓயா வீதியில் பெனும் பாலம் என்னுமிடத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த சில நாட்களுக்கு முன் னர் வீதி விபத்தொன்றில் கால் முறிந்த அம்பாறையைச் சேர்ந்த எச்.எல்.ஏ.கபூர் என்பவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருகி றார்.

இவரைப் பார்ப்பதற்காக நேற் றுக்காலை அம்பாறை, நிந்தவூரி லிருந்து ஒன்பது பேர் ஹை ஏஸ் வாகனமொன்றில் கண்டி வைத் தியசாலைக்குச் சென்று அவரைப் பார்த்து விட்டு மீளத்திரும்பிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு வந்த இவர்களின் வாகனம் வேகமாக வந்த காரணத் தால் வீதியிலுள்ள பாலமொன்று டன் மோதி விபத்துக்குள்ளாகி ஆற்றுக்குள் விழுந்தது. இந்தச் சம்பவத்தில் வாகனச் சாரதி உட்பட ஏழு பேர் மரணமடைந்த னர். இதில் காயமடைந்த இருவர் ஆபத்தான நிலையில் அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மரணமடைந்த அனைவரின் சடல மும் மீட்கப்பட்டு அம்பாறை வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள் ளது.

இந்தச் சம்பவத்தில் கல்முனை கல்வி வயலக் கணக்காளர் - பரீத் அலி, இவரது மனைவி சைபான், இவர்களின் குழந்தை மற்றும் நிந்தவூர் அல்மதீனா வித்தியாலய அதிபர் எஸ்.ஜே.ஜபார், அவரது மகள் ஷிமாயா (க.பொ.த உ/த மாணவி), வாகனச் சாரதி மற்றும் சிறிய குழந்தை ஒன்று ஆகியோரே மரணமடைந்தவர்களாவர். (07)

## இராணுவத்துக்கு தகவல் கொடுத்த இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் 25 வயது இளைஞரொருவர் நேற்றுமுன் தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட இளைஞர் கிருஷ்ணபிள்ளை இராமேஸ்வரன் என அடையாளம் காணப்பட் டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர் இராணுவத்துக்கு தகவல் கொடுத்து வந்தவர் என்றும் தெரி விக்கப்படுகிறது.

அலி ஒலுவ சந்தியிலுள்ள உறவினரின் வீட்டில் இவர் தங்கி யிருந்த போது மோட்டார் சைக்க ளில் சென்ற இரண்டு இளைஞர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ள தாக இந்தக் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர். (04)

## அரசும் புலிகளும் கேட்டுக்கொண்டால் சமாதான முயற்சியிலிருந்து விலகுவோம்

### நோர்வே தூதுவர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் கேட் டுக்கொண்டதற்கு இணங்கவே இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஏற்பாட்டாளர் நிலையை நோர்வே வகித்து வருகின்றது.

இந்த இரண்டு தரப்பும் கேட்டுக் கொண்டால் தமது நாடு இந்த ஏற்பாட்டாளர் நிலையிலிருந்து விலகிக்கொள்ளும் என இலங்கைக் கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அம்பாந்தோட் டையில் இடம்பெற்ற ஊடகவியலா ளர்கள் மாநாட்டிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு - தென்பகுதி ளுக்கு சமாதானம் ஏற்படவேண்டும் என்பதற்காகவே நோர்வே அரசு நிதியுதவிகளை வழங்கி வருகின் றது. அதன் அடிப்படையில் தென் னிலங்கைக்கான அபிவிருத்திக்கும், நோர்வே 3000 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது என்று ஹான்ஸ் பிரட்ஸ்கர் மேலும் தெரிவித்தார். (01)

## சோமவன்ச மருத்துவமனையில்!

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இருதய நோயால் பாதிக்கப்பட்டு கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை இருதய நோயால் பாதிக்கப்பட்ட சோமவன்ச வுக்கு தனியார் மருத்துவமனையில் கிசிச்சை அளிக்கப்பட்டு வருவதா கவும் - இவருக்கு விரைவில் இருதய அறுவைச் சிகிச்சை மேற் கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொமாண்டோப் பயிற்சியை 86 படையினர் முடித்தனர்!

இரண்டாவது கொமாண்டோ படைப் பிரிவைச் சேர்ந்த 86 இரா ணுவத்தினர் விசேட பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளனர்.

கொமாண்டோப் பிரிவின் பயிற் சியை வவுனியாவில் பெற்று வெளி யேறிய முதலாவது இராணுவ அணி இதுவாகும்.

பயிற்சி முடித்த படையினரின் சாகச நிகழ்வுகள் வன்னி இரா ணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றன. இந்த நிகழ்வில் வன்னி இராணுவத் தலைமையகப் பொதுக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## படுகொலை...

ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

மாணவர்களின் பாண்ட் வாத் திய அணிவகுப்புடன் விளையாட் டுக் கழகங்களின் வீரர்களின் அணி வகுப்புடனும் பூதவுடல்கள் வல் வெட்டித்துறை சந்தியூடாக எடுத் துச் செல்லப்பட்டு. ஊரணி மயா னத்தில் தகனம் செய்யப்பட்டது. வீதிகளில் மக்கள் கூடி நின்று படு கொலை செய்யப்பட்ட இருவருக் கும் மலர் அஞ்சலி செலுத்தினர்.(14)

## பொலிஸ் அத்தி...

முரணான வகையில் - இராணுவ அதிகாரிகள் மருத்துவ சிகிச்சைக் காக அங்கிருந்து நேற்றுமுன் தினம் அழைத்துச் சென்றிருந்த னர்.

இந்தச் சம்பவங்களின் போது பொலிஸார் வைத்தியசாலை நடை முறைகளை மீறி நடந்திருந்தால்- அதற்குத் தாம் மன்னிப்புக் கோரு வதாக உதவிப் பொலிஸ் அத்தி யட்சகர் லக்ஷ்மன் குருகே தெரி வித்தார்.

நேற்றுக்காலை 10 மணியள வில் வல் வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்ற அவர் மாவட்ட வைத்திய சாலை அதிகாரியிடம் இவ்வாறு மன்னிப்புக் கோரினார். அவருடன் வல்வெட் டித்துறை, பருத்தித்துறை, நெல்லி யடி பொலிஸ் நிலைய அதிகாரி களும் சென்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## மாவீரர்களின் பெற்றோர் இன்று கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தமது எல்லைப் பரப்பிலுள்ள மாவீரர்களின் பெற் றோர்களை இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கௌரவிக்கவுள்ளது.

உடுப்பிட்டி கூட்டுறவுச் சங்கத் தலைவர் வெ.தர்மகுலசிங்கம் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமராட்சி அரசியற் துறைப் பொறுப்பாளர் இ.தயா பிர தம விருந்தினராகக் கலந்துகொள்ள வுள்ளார்.

இதில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பும், விடுலைப் போரில் பெரும் பங்கினை வகிப்பவர்கள் "சுதேசிகள் - புலம் பெயர்ந்தோர்" என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

## போராளிகளுக்கு...

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்று வரும் இத்தகைய சம்பவங்கள் குறித்து நாங்கள் பலமுறை படைத் தரப்பி னரின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் எவ்வித நடவ டிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட் டதாக இல்லை என்றுதான் கருது கின்றோம்.

அப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தால் இப்படியான சம்ப வங்கள் இடம்பெற்றிருக்க மாட்டாது.

மட்டக்களப்பு நகர அலுவலகம் அமைந்துள்ள இடம் இராணுவத் தின் பாதுகாப்பிற்குட்பட்ட பிரதே சம்.

அதுபோல் களுவாஞ்சிக்குடி அலுவலகம் அமைந்த இடம் விசேட அதிரடிப்படையின் பாது காப்பிற்குட்பட்ட பிரதேசம். அப்படி யிருந்தும் இப்படியான சம்பவங்கள தொடருகின்றது என்றால் இதற்கு யார் பொறுப்பு?.

எமது போராளிகளுக்கு அச் சுறுத்தலை உருவாக்கிய நிகழ்வை நாம் வன்மையாகக் கண்டிக்கின் றோம்.

போராளிகளுக்கு ஏதாவது நடக்குமானால் அதற்கான பொறுப்புக்களை இராணுவம் தான் ஏற்க வேண்டும்.

இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு தெரி வித்துள்ளோம் என்றார்.

## மாவீரர் எழுச்சி...

இந்த நிகழ்வில் கலந்துகொணட அனைத்துப் பொதுமக்களும் மல ரஞ்சலி செலுத்தினர்.

மாவீரர் எழுச்சிவார ஆரம்ப நிகழ்வு வேலணை சாட்டி மாவீரர் துயிலுமில்லத்திலும் நேற்றுக் காலை 9 மணியளவில் சாட்டி துயிலுமில்ல புனரமைப்புக்குழுத் தலைவர் ப.கனகலிங்கம் தலைமை யில் இடம்பெற்றது.

இங்கு பொதுச்சுடரினை மேஜர் எழிலரசனின் தந்தை மு.நவரத்தி னம், லெப்.குணாளனின் தந்தை முத்துக்கிருஷ்ணன், 2ஆம் லெப் பொற்செல்வியின் தந்தை இராச துரை, வீரவேங்கை தயாநிதியின் தந்தை சீவரத்தினம், வீரவேங்கை கோமதியின் தந்தையும், சாட்டி துயிலுமில்லப் பொறுப்பாளருமான கோமகன், தீவக மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் சிவானி, கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளர் புஷ்பன் ஆகி யோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை தீவக அரசியற்துறை சிறப்புப் பொறுப்பா ளர் கண்ணன் ஏற்றிவைத்தார். வேலணை அரசியற்துறைப் பொறுப் பாளர் யாழ்.நம்பி கொடிவணக்கம் செய்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியற்துறைத் துணைப் பொறுப் பாளர் செம்மணன் உட்பட போரா ளிகள், பொதுமக்கள் எனப் பெரு மளவானோர் கலந்துகொண்டு அஞ் சலி செலுத்தினர்.

வடமராட்சி எள்ளம்குளம் மாவீ ரர் துயிலும் இல்லத்தில் ஆரம்ப மாகிய ஆரம்பநாள் நிகழ்வின்போது, பொதுச்சுடரினை வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலை வர் சுபாஸ் ஏற்றி வைத்தார். தமிழீ ழத் தேசியக் கொடியினை வட மராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஏற்றிவைத் தார். இந்த நிகழ்வில் போராளிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தென்மராட்சி கொடிகாமம் மாவீ ரர் துயிலும் இல்லத்தில் இடம் பெற்ற மாவீரர் வார ஆரம்பநாள் நிகழ்வுகளின்போது, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தேசியக் கொடியை யும், தென்மராட்சிக் கோட்ட அர சியற்துறைப் பொறுப்பாளர் சிவ நாத் பொதுச் சுடரினையும் ஏற்றி வைத்தனர்.

இதேவேளை, நேற்று ஆரம்ப மாகிய மாவீரர் எழுச்சிவாரத்தை யடுத்து யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளும் சிவப்பு, மஞ்சல் கொடி களால் அலங்கரிக்கப்பட்டு வரு கின்றன.

## புலிகளின் அரசியற்துறை அலு...

இந்தச் சம்பவத்தின் போது நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் உட்பட 10 இற்கும் மேற்பட்ட போராளிகள் அங்கு தங் கியிருந்ததாகத் தெரியவருகிறது.

பட்டிருப்புக் கோட்ட அரசியற் துறை அலுவலகம் மீது மேற்கொள் ளப்பட்ட தாக்குதலில் அலுவலகக் கட்டடத்தின் முன்பக்கம் சேத மடைந்ததோடு, குண்டு வெடித்துச் சிதறியதில் அருகிலுள்ள வீடொன்று பலத்த சேதமடைந்தது.

பிளாஸ்ரிக் பாத்திரங்களுக்குள் நிரப்பப்பட்ட குண்டுகள் அலுவல கத்தை நோக்கி வீசப்பட்டதாக தக வல் வெளியாகியுள்ளது.

24 மணிநேரமும் பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவ கண்காணிப்பிற்குட்பட்ட பாதுகாப்புப் பிரதேசங்களிலே இந் தக் குண்டுத் தாக்குதல் சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன.

விடுதலைப் புலிகளின் மாவீரர் தின வாரம் ஆரம்பமாகவிருந்த நேரத்தில் நடைபெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவி னர் நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதே சங்களில் உள்ள விடுதலைப் புலி களின் அரசியற்துறை அலுவலகங் கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்கு தல்களை - விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என இராணுவப் பேச்சாளர் தயா ரத்நாயக்க தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்படியான தாக்குதலை பார்க் கின்றபோது வெளியே இருந்து வந்து யாரும் செய்ததாகத் தென் படவில்லை. ஏனெனில் இங்கிருக் கின்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் வெளியே இருந்து எவரும் வந்து செய்யக்கூடிய விதத்தில் இருக்க வில்லை இதனால் வெளியிலிருந்து யாரும் வந்து செய்யமுடியாது.

இந்த மாதிரியான சம்பவங் களுக்கு இருக்கின்ற பொதுத் தன்மைகளை ஆராய்ந்து பார்க் கின்றபோது இவை விடுதலைப் புலிகளின் செயல்களாகத்தான் தென்படுகிறது.

விடுதலைப் புலிகள் வேண்டு மென்றே இராணுவத்தின் மீது அவப்பெயரை உண்டுபண்ணுவ தற்காக செய்த தாக்குதலாகத் தான் இது தென்படுகின்றது எனத் தெரிவித்தார்.

இதேவேளை. மட்டக்களப்பு நக ரில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்கு தல் சம்பவம் தொடர்பாக சந்தே கத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களையும் எதிர் வரும் 3 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக் களப்பு நீதிவான் உத்தரவிட்டுள் ளார்.

சிங்கள வாடி வீடொன்றில் இனந்தெரியாத நபர்களினால் இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வீட்டின் ஒரு பகுதியில் வசிக்கும் முதலிக்குடாவைச் சேர்ந்த இராசலிங்கம் விமலநாதன் (வயது 21) பண்டாரவளையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் கண்ணதாசன் (வயது 23) ஆகிய இருவரும் சந் தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டவர்களாவர். இவர்கள் பேக்கரி ஒன்றில் பணி புரிபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### செல்வி ஞானேஸ்வரன் பௌசிகா

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி வீதியைச் சேர்ந்தவரும், கோண்டாவில் இந்து மகா வித்தியாலய 7 ஆம் ஆண்டு மாணவியு மான செல்வி ஞானேஸ்வரன் பௌசிகா நேற்று (21.11.2004) காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (22.11.2004) 12 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உறவினர்கள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.